Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 232 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 32, செவ்வாய் 16.07.2013

MULTI TIMBER DEALERS
மல்ரி மர விற்பனை நிலையம்
கொழும்பு விலையில் கிளிநொச்சியில்...
மொத்தமாகவும் சில்லறையாகவும்
புதிய மக்கள்வங்கி முன்பாக, 79/2, A9 வீதி, கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு:
077 2612452, 077 3357333
077 3322993, 021 2283829
Fax : 0212283829
அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

# விக்னேஸ்வரன் சம்பந்தனால் முதன்மை வேட்பாளராக தெரிவு

## நேற்றைய கூட்டத்தின் பின்னர் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நிறுத்தப்பட்டுள்ளார் எனக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று அறிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பம்பலப்பிட்டி அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.



இந்தக் கூட்டத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக, தமிழரசுக் கட்சியின் யாழ். கிளையினால் பிரேரிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தான் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அங்கு தெரிவித்தார்.
இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நிறுத்துவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவித்தார்.
கட்சித் தலைவரின் முடிவுக்கு தாம் கட்டுப்படுவதாகக் கூட்டத்தில் கலந்துகொண்ட பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.
இத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் இழுபறி முடிவுக்கு வந்தது.
இதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னாள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்து வடக்குத் தேர்தல் குறித்து விரிவாக ஆராய்ந்தனர். (த-5)

## சுயேச்சைக் குழு யாழில் நேற்று கட்டுப் பணம்

யாழ்ப்பாணம்,ஜூலை 16
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக முதலாவது சுயேச்சைக் குழு யாழ். மாவட்டத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.
யாழ். மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்தில் கட்டுப் பணமாக 38 ஆயிரம் ரூபா சுயேச்சைக்குழு ஒன்றினால் நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் செலுத்தப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபைக்கு முதன் முறையாகத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதனால் வடக்கில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.
எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை வேட்பு மனுக்

தொடர்ச்சி: பக்கம் 21

இந்தியா



பக். 06
இந்தியா நிச்சயம் தட்டிக் கேட்கும்

உலகம்



பக். 07
ஈரானிடம் அணு ஆயுதங்கள்

விளையாட்டு



பக். 23
அன்டர்சனே வெற்றிக்கு காரணம் – குக்

## காணி அபகரிப்புக்கு எதிரான மனுக்கள் ஒன்றாக விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 16
வலி.வடக்கு காணி சுவீகரிப்புத் தொடர்பில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சிலரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எதிர்வரும் ஓகஸ்ட் 27 ஆம் திகதி வரை ஒத்தி வைக் கப்பட்டுள்ளது.
வலி.வடக்கு காணி சுவீகரிப்புத் தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சி.ஜே.வெலிய முனவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் என்பவற்றுடன் யாழ்ப்பாண சட்டத்தரணிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் ஒன்றாக்கப்பட்டு எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## இலங்கைக்கு எதிரான நாடுகள் தேர்தலை கண்காணிக்க கூடாது

### ஆணையாளருக்கு உத்தரவு

கொழும்பு, ஜூலை 16
ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கையை எதிர்த்த நாடுகளின் பிரதிநிதிகளை வடக்கு மாகாணத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கு அழைக்கக் கூடாது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும், தேர்தல்கள் ஆணையாளருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இந்தத் தகவலை வெளியிட்டார் எனக் கூறப்பட்டது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளைத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்கு அழைக்கக்கூடாது என்று தான் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார் எனத்தெரிவித்தார்தேர்தல்கள் ஆணையாளர் யாரால் அந்த உத்தரவு வழங்கப்பட்டது என்பதை அங்கு தெரிவிக்கவில்லை.
தெற்காசியத் தேர்தல் முகாமைத்துவச் சபை, 'ஆசியான்' தேர்தல் கண்காணிப்பு அதிகார சபை ஆகியன தேர்தல் கண்காணிப்புக்கு அழைக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
(த-5)

## விடுவிக்காவிடின் உயிர் துறப்பேன்

### தமிழ் அரசியல் கைதி உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூலை 16
'என்னைப் புனர்வாழ்வளித்து விடுதலை செய்ய வேண்டும். அதுவரை நான் உணவருந்த மாட்டேன். அரசு எனக்கு தீர்வு பெற்றுத் தராவிட்டால் நான் எனது உயிரை மாய்த்துக் கொள்வேன் ' எனத் தெரிவித்து தமிழ் அரசியல் கைதி ஒருவர் 10 நாள்களாக உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து வருகிறார் என சிறைச்சாலை வட்டாரங்கள் மூலம் தெரியவந்தது.
கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உள்ள எஸ்.கேதீஸ்வரன் (வயது-22) என்ற கைதியே இவ்வாறு உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்.
காடுகளில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு நீர் ஆகாரம் வழங்கினார் என்று குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 2009ஆம் ஆண்டு கேதீஸ்வரன் கைது செய்யப்பட்டார். அவர் மொனராகலை நீதிமன்றம் ஊடாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
வெல்லாவளி மட்டக்களப்பைச் சேர்ந்த இவர் தாய், தந்தை அற்றவர்.
கடந்த 6ஆம் திகதி மொனராகலை சிறைச்சாலையில் கேதீஸ்வரன் தன்னை விடுவிக்கக்கோரி உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார். எனினும் அவர் துன்புறுத்தப்பட்டு எவருக்கும் தெரியாத வண்ணம் இந்தச் சம்பவம் மறைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.
அவர் தொடர்ந்து உணவருந்த மறுத்தமையால் நிலைமை மோசமடைய கடந்த 13ஆம் திகதி கொழும்பு மகஸின்

தொடர்ச்சி: பக்கம் 21

## இந்தியாவின் அழுத்தத்தை அடுத்தே சம்பந்தனைச் சந்தித்தார் ஜனாதிபதி

### புதுடில்லி வட்டாரங்கள் தகவல்

புதுடில்லி,ஜூலை 16
இந்தியாவின் அழுத்தத்தின் பேரில் தான், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேசியுள்ளதாக புதுடில்லித் தகவல்கள் தெரிவித்துள்ளன.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி

தொடர்ச்சி: பக்கம் 21

## ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு நேற்று இலங்கை வந்தடைந்தது

கொழும்பு,ஜூலை 16
ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழு நேற்று இலங்கை வந்துள்ளது எனக் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதரகம் தெரிவித்துள்ளது.
தெற்காசிய நாடுகளின் உறவுகளுக்கான ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரதிநிதியான ஜியான் லம்பேர்ட் தலைமையில் வந்துள்ள இந்தப் பிரதிநிதிகள் குழு, தமது ஒரு வார காலப் பயணத்தின் போது, வட பகுதிக்கும் பயணம்

தொடர்ச்சி: பக்கம் 21

## 30 வாடகைக் கார்களை விற்றுப் பிழைத்த ஆசாமி

### யாழ். பொலிஸாரின் வலையில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்ப்பாணத்தில் சொகுசுக் கார்களை வாடகைக்கு அமர்த்தி அவற்றைத் தனது சொந்தக்கார்கள் என்று கூறி விற்பனை செய்த ஒருவர் யாழ். பொலிஸாரால் பிடிக்கப்பட்டார்.
அவர் விற்பனை செய்த 30 கார்களில் ஏழு சொகுசுக் கார்கள் மீட்கப்பட்டன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரே இந்த ஏமாற்றுத் தந்திரத்தை மேற்கொண்டுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:
யாழ்ப்பாணத்தில் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு சொகுசுக் கார்களை வாடகைக்கு விடுபவர்களிடம் இருந்து நீண்ட நாள் வாடகைக்குக் கார்களைப் பெற்றுள்ளார் சந்தேகநபர்.
அந்தக் கார்களை வேறு நபர்களுக்கு விற்பனை செய்து விட்டுப் பணத்தைப் பெற்றுள்ளார். மலிவு விலையில் கார் கிட்டியதால் விழுந்தடித்து வாங்கிக்கொண்டனர் பலர்.
இவ்வாறு 30 சொகுசுக் கார்கள் வாடகைக்குப் பெறப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.
வாடகைக்குக் கார்களை விட்ட

தொடர்ச்சி: பக்கம் 21

# ஆஸ்திரேலியா செல்லும் அகதிகளுக்கு வரவேற்பு

## மோர்லாண்ட் நகர சபை தீர்மானம்

கான்பரா, ஜூலை 16
ஆஸ்திரேலியா செல்லும் அகதிகளுக்கும், அரசியல் தஞ்சம் கோருபவர்களுக் கும் வரவேற்பு அளிக்கப்ப டும் என்று அந்த நாட்டின் மோர்லாண்ட் நகர சபை அறிவித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிர தான நகரான மெல்பேர் னில் இந்த மோர்லாண்ட் நகரசபை அமைந்துள்ளது. இங்கு ஏற்கெனவே ஆயி ரக்கணக்கான அரசியல் தஞ் சம் பெற்றவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தொடர்ந்தும் அரசியல் தஞ்சம் கோருப



வர்கள் மற்றும் அகதிகளை வரவேற்பதாக மோர்லாண்ட் நகர சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பான தீர்மான மொன்றை நிறைவேற்றி யுள்ள மோர்லாண்ட் நகர சபை, அகதிகள் மற்றும் அர சியல் தஞ்சம் கோருபவர் களை வரவேற்கும் பதாகை ஒன்றையும் சபை அலுவ லக முன்றலில் தொங்க விட்டுள்ளது.

அண்மைக்காலமாக அக திகளாக ஆஸ்திரேலியா வில் தஞ்சம் அடைபவர்க ளின் எண்ணிக்கை அதிக ரித்ததைத் தொடர்ந்து அக திகள் பிரச்சினை அந்நாட்டு அரசியலில் முக்கிய இடத் தைப் பெற்றுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டின் முக்கிய நகர சபை ஒன்று இவ்வாறான அறிவிப்பை வெளியிட்டுள்ளமை எதிர் காலத்தில் ஆஸ்திரேலியா வில் தஞ்சம் கோருபவர்க ளுக்கு ஒரு நம்பிக்கை ஒளிக் கீற்றாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

### ஒருவர் கொலை; மூன்று பேருக்கு மரண தண்டனை

கொழும்பு, ஜூலை 16
கொலைக் குற்றம் சாட்டப் பட்ட மூவரைக் குற்றவா ளிகள் என இனங்கண்ட கேகாலை நீதிவான் நேற் றுத் திங்கட்கிழமை மரண தண்டனை விதித்துள்ளார்.

அங்குருவெல்ல பிரதேசத் தில் 1996ஆம் ஆண்டு இடம் பெற்ற கொலை நிரூபிக்கப் பட்டமையை அடுத்தே மரண தண்டனை விதிக்கப்பட்டுள் ளது. இரண்டு சகோதரர்கள் மற்றும் அவர்களின் நண் பர் ஆகியோருக்கே இந்த மரண தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் ஏற்க னவே 50 லட்சம் ரூபா திருட் டுச் சம்பவமொன்று தொடர் பில் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டு 20 வருடச் சிறைத் தண்டனையை அனு பவித்து வருகின்றனர். இந்த நிலையிலே மரண தண் டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

### இரு பாகிஸ்தான் பிரஜைகள் போதைப் பொருளுடன் கைது

கொழும்பு, ஜூலை 16
சுமார் 60 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்களுடன் பாகிஸ் தான் பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


பாகிஸ்தானிலிருந்து கொண்டு வரப்பட்ட இனிப்புப் பொருள் கள் அடங்கிய இரண்டு ரின் களில் இருந்தே சுமார் ஒரு கிலோகிராம் நிறைகொண்ட 'பிரௌன் சுகர்' என்ற ரகத் தைச் சேர்ந்த போதைப் பொருள்கள்கைப்பற்றப்பட்டன.

இவர்கள் இருவரையும் பாணந்துறை ரயில் நிலை யத்துக்கு அருகில் வைத்தே கைது செய்ததாகச் சுங்க போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

பாணந்துறையில் வினியோ கஸ்தர்களுக்குக் கையளிப் பதற்குத் தயாராகவிருந்த நிலையிலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப் பட்டுள்ளனர். (த)

## பறக்கும் மீன்களுக்குத் தடை

கொழும்பு, ஜூலை 16
இலங்கையின் இனப்பிரச்சி னையை மையப்படுத்தித் தயா ரிக்கப்பட்ட 'பியம்பனாமாலுவோ' (பறக்கும் மீன்கள்) என்ற திரைப்படத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.




இலங்கை அரசு மற்றும் பாதுகாப்புப் படையினருக் குக் களங்கத்தை ஏற்படுத் தும் வகையில் அந்தத் திரைப் படம் இருப்பதனால் அதற் குத் தடைவிதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் திரைப்படத்தைத் தயாரித்தவருக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தத் திரைப் படத்தைச் சஞ்சீவ புஷ்ப குமாரவே தயாரித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற திரைப்பட விழாவில் இது திரையிடப்படவிருந்த நிலை யிலேயே தடை விதிக்கப்பட் டுள்ளது.

இந்தத் திரைப்படமானது பொதுமக்களுக்குக் காண் பிப்பதற்கு உகந்தது என்று தணிக்கைச் சபை அனும தியளித்திருந்தமை குறிப் பிடத்தக்கதாகும்.

சர்வதேச விருது பெற்ற இந் தத் திரைப் படத்தைத் தயா ரித்த நிறுவன அதிகாரிக ளிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) விசார ணைகளை மேற்கொண் டுள்ளனர். (த)

## இந்திய விமானப் படையின் விமானத்தில் வந்த மேனன்

### இலங்கைக்கு சிவப்பு சமிக்ஞை

கொழும்பு, ஜூலை 16
இலங்கைக்கு இராஜதந்திர ரீதியான சிவப்புச் சமிக் ஞையை வெளிப்படுத்தவே, இந்தியாவின் தேசிய பாது காப்பு ஆலோசகர் சிவ்சங் கர் மேனன் இந்திய விமா னப்படையின் தனி ஜெட் விமானம் மூலம் கொழும்பு வந்ததாகக் கொழும்பு ஆங் கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய பாது காப்பு ஆலோசகர் சிவ்சங் கர் மேனன், கடந்த 8ஆம் திகதி இரண்டு நாள் பயண மாக இந்திய விமானப்



படைக்குச் சொந்தமான தனி விமானத்தில் கொழும் புக்குப் பயணம் மேற்கொண் டிருந்தார்.

இது கொழும்பிலுள்ள இராஜ தந்திர மற்றும் அரசியல் வட் டாரங்களில் சூடான விவகா ரமாகப் பேசப்பட்டது.

'இந்தியன் எயர்லைன்ஸ்' விமானத்தில் வராமல், விமா னப்படை விமானத்தைத் தெரிவு செய்தது வழக்கத் துக்குமுரணானதாக இருந்தது.

இந்திய விமானப்படை விமானத்தைப் பயன்படுத்த மேனன் தெரிவு செய்தது, இலங்கை அரசுக்குத் தனி யான செய்தி ஒன்றைச் சொல்லும் வகையிலான – இராஜதந்திர ரீதியான சிவப் புச் சமிக்ஞையை வெளிப் படுத்தவே என்றும் கருதப் படுவதாக, கொழும்பு ஆங் கில நாளிதழ் தெரிவித்துள் ளது. (த)

### பொலிஸ் பொறுப்பதிகாரி திருமலையில் கைது

திருகோணமலை, ஜூலை 16
திருகோணமலை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப் புப் பிரிவின் பொறுப்பதிகாரி லஞ்ச ஊழல் ஆணைக்குழு வினால் கைது செய்யப்பட் டுள்ளார்.

10 ஆயிரம் ரூபாவை லஞ்ச மாகப் பெற்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பிரதேசத் தில் வசித்துவரும் வியாபாரி ஒருவரிடமிருந்து குறித்த தொகை பணத்தை லஞ்ச மாகப் பெற்றுக் கொள்ளும் போது நேற்று பகல் 12.45 மணியளவில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (த)

## 'லீசிங்' அதிகாரிகள் எனக்கூறி யாழ்ப்பாணத்தில் வாகன மோசடி

### பொலிஸார் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 16
தென்பகுதியில் இருந்து வந்த இருவர் தம்மை யாழ்ப் பாணத்திலுள்ள 'லீசிங்' நிறு வனம் ஒன்றின் அதிகாரிகள் என்று கூறி அந்த நிறுவ னத்தில் 'லீசிங்' அடிப்படை யில் வாகனத்தைப் பெற்ற வரிடம் இருந்து வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

இதற்கு உடந்தையாக இருந் தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை தாம் கைது செய் துள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொக்குவிலைச் சேர்ந்த ஒருவரே யாழ்.நகரிலுள்ள 'லீசிங்' நிறுவனம் ஒன்றிலி ருந்து வாகனத்தைப் பெற் றுள்ளார். அவர் உரிய காலத்தில் தவணைப் பணத் தைச் செலுத்தி வந்துள்ளார்.

இந்த நிலையிலேயே தென் பகுதியிலிருந்து இரண்டு பேரும் யாழ்ப்பாணத்தில் உள்ள குறித்த 'லீசிங்' நிறு வன அதிகாரிகள் என்று தம்மை அடையாளப்படுத்தி தவணைப் பணத்தை உரிய முறையில் செலுத்தவில்லை என்று கூறி வாகனத்தை எடுத்துக்கொண்டு தென் பகுதிக்குச் சென்றுவிட்டனர்.

உரியமுறைப்படி பணம் செலுத்தி வந்த கொக்குவில் நபர் குறித்த 'லீசிங்' நிறு வனத்துக்குச் சென்று அது தொடர்பில் எடுத்துக்கூறி ஆவ ணங்களைச் சமர்ப்பித்த போதே குறித்த 'லீசிங்' நிறு வனத்தின் பெயரில் மோசடி இடம்பெற்றமை தெரிய வந்தது. (த-4)

## சட்டவிரோதமாகக் கணவாய் பிடிப்பதைத் தடுக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் சட்டவிரோதமாகக் கணவாய் பிடிப்பதை உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றது.

> "வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இந்தக் கடற்பகுதியில் சட்டவிரோதமாகக் கணவாய் பிடிக்கும் நடவடிக் கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர், கடற் றொழில் கூட்டுறவுச் சங் கங்களின் பிரதிநிதிகள், இராணுவ அதிகாரிகள், கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் அதி காரிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இந்தக் கடற் பகுதியில் சட்டவிரோதமாகக் கணவாய் பிடிக்கும் நடவடிக் கையில் ஈடுபட்டு வருகின் றனர்.

கடலில் இவ்வாறு சட்ட விரோதமாகக் கணவாய் பிடிப்பதால் பிரதேச மீனவர் களின் கடற்றொழில் உபகர ணங்கள் சேதத்துக்கு உள் ளாகியுள்ளன. எனவே இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மீனவர் சங்கப் பிரதிநிதிக ளால் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அரசினால் தடை செய்யப்பட்ட வழி முறை மூலம் கணவாய் பிடிக்கும் நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள் ளதாக கடற்றொழில் நீரி யல்வளத் திணைக்கள அதி காரி தெரிவித்தார். (த-17)

## துமிந்த வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஜூலை 16
நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா வெளிநாடு செல்வதற்கான அனும தியை நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை வழங்கியுள் ளதுடன் அவருடைய கடவுச் சீட்டை விடுவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

ஓகஸ்ட் 3ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சிகிச்சை களுக்காகவே வெளிநாடு செல்வதற்கான அனுமதியை மேல்நீதிமன்றம் வழங்கி யுள்ளது. (த)

## பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய சஞ்சீவவுக்குத் தடை

கொழும்பு, ஜூலை 16
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற் பாட்டாளரான சஞ்சீவ பண்டார பல்கலைக்கழக வளாகங்க ளுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



இந்தத் தடைஉத்தரவு கொழும்பு கோட்டை நீதிவானினால் விதிக் கப்பட்டுள்ளது. இதனால் நாட்டிலுள்ள எந்தவொரு பல் கலைக்கழகத்துக்குள்ளும் பிரவேசிக்கக் கூடாது எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சஞ்சீவ பண்டார நேற்றுத் திங்கட்கிழமை பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளார். இதன்போதே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. (த)

# சர்வதேச சில்ப கண்காட்சி அடுத்த மாதம் கொழும்பில்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

2013ஆம் ஆண்டுக்கான சர்வதேச சில்ப கண்காட்சி அடுத்த மாதம் நடுப்பகுதியில் கொழும்பில் நடத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

உள்ளூர் சிறு கைத்தொழிலாளர்களால் ஆக்கப்பட்ட தரமான கைப்பணிப் பொருள்களை சர்வதேச முதலீட்டாளர்களுக்கு காட்சிப்படுத்தும் கண்காட்சியாக நடத்தப்படும் இந்தக் கண்காட்சி வருடந் தோறும் நடத்தப்படுகிறது.


அந்த வகையில் இந்த வருடத்துக்கான கண்காட்சியை அடுத்த மாதம் 14ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்வோர் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

சிறந்த தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை சர்வதேச ரீதியில் சந்தைப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்களும் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளனர். (வ-14)

# எங்கள் பிள்ளைகள் எங்கே? வவுனியாவில் அமைதிப் பேரணி




வலி. வடக்கு,ஜூலை 16


வவுனியா மேல் நீதிமன்றத்தில் காணமல் போனவர்கள் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணைகளுக்கு ஆதரவு தெரிவித்து வடமாகாணத்தில் காணாமற் போனவர்களது சங்கத்தின் ஏற்பாட்டில் அமைதி ஊர்வலம் ஒன்று இடம் பெற்றது.

அமைதி ஊர்வலத்தில் மன்னார், வவுனியா,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் காணாமல் போனவர்களது உறவினர்கள் சுமார் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று காலை 9.30 மணியளவில் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு முன் ஒன்று திரண்ட அவர்கள் குறித்த அமைதி ஊர்வலத்தை மேற்கொண்டனர்.இறுதியாக ஊர்வலம் வவு னியா நகர சபை மண்டபத்தைச் சென்றடைந்தது. "காணாமல் போன பிள்ளைகள் எங்கே?, நீதிமன்றமே எங்களுக்குத் தஞ்சம், அரசியல் கைதிகளை விடுதலை செய்" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டம் நடத்தினர். போராட்டத்தின் போது துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப் பட்டன.

-இதன் போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், எஸ்.வினோ நோக ராதலிங்கம்,வவுனியா நகர சபையின் உப தலைவர் ரதன், மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் அந்தோனி சகாயம், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை அடிகளார்,மன்னார் பிரஜைகள் குழுவின் உப செயலாளர் புண்ணியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-5-12-402)

# தெல்லிப்பழை மகளிர் இல்ல புதிய விடுதி திறப்புவிழா



வலி. வடக்கு,ஜூலை 16

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தினால் நடத்தப்பட்டுவரும் மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கான புதிய விடுதி திறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் ஆலய தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

ஆலயத்தின் தெற்குப் புறமாக அமைக்கப்பட்டுள்ள இந்த விடுதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீட சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி துஷாந்தி மிகுந்தனும் திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார்கள்.

துர்க்கையம்மன்ஆலயத்தில் இடம்பெற்ற பூசைவழி பாடுகளைத் தொடர்ந்து அமரர் துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்ட பின்னர் புதிய மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. (ஒ-86)

# சட்டவிரோதமாக பனை தறிப்பு அசண்டையாக பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சட்ட விரோதமாக பனைகளைத் தறிப்பவர்கள் மீது பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள பின்னடிப்பதாக பனை அபிவிருத்திச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

குடாநாட்டில் இருந்த பனை வளங்கள் போர்க்காலச் சூழலின் போது அழிவடைந்துள்ள நிலையில் இருக்கக் கூடிய வளத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த நிலையில் பனைகளைத் தறிப்பதற்கு அனுமதி பெற வேண்டிய கட்டுப்பாடு உள்ளது.

வீட்டுக்காணிகளில் உள்ள பனை மரங்களைத் தறிப்பவர்களும் அனுமதி பெற்ற பின்னரே தறிக்க முடியும். ஆனால் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் சட்ட விரோதமாக பனைகளை பலர் தறித்து வருகின்றனர்.

பனை அபிவிருத்திச் சபையின் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் இத்தகைய செயற்பாடுகளை அவதானித்து அவர்களுக்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்தாலும் பொலிஸார் அதனை அசண்டையீனமாக எடுத்துக் கொள்கின்றனர்.

சட்டவிரோதமாக பனைகளைத் தறிப்பதை பொலிஸார் பெரிய குற்றமாக எடுத்துக் கொள்ளவில்லை. பொலிஸாரின் நடவடிக்கைகள் கடுமையாக மேற்கொள்ளப்படாத காரணத்தால் பனைகளைச் சட்ட விரோதமாகத் தறிப்போர் அதிகரித்து வருகின்றனர்.

குடாநாட்டின் பனை வளத்தை பாதுகாப்பதற்கு ஒத்து ழைப்பு வழங்குமாறு பொலிஸாரிடம் கோரினாலும் அவர்கள் இவ்விடயத்தில் அக்கறை எடுப்பதில்லை.

இதனால் எதிர்காலத்தில் பனைவளம் பெரியளவிலான அழிவைச் சந்திக்க நேரிடும் எனவும் தெரி விக்கப்படுகிறது. (வ-14)

# மினி முகாமாக இயங்கிய வீடு ஒப்படைப்பு

வரணி இயற்றாலைப் பகுதியில் பிரதான வீதி அருகில் இருந்த வீடு ஒன்றில் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த மினி முகாம் ஒன்று அண்மையில் குடியிருப்பாளரிடம் படைத்தரப்பினரால் கையளிக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்த படையினர் கொடிகாமம் மாவீரர் மயானப் பகுதியில் தங்கி இருக்கும் வீட்டுத் தொகுதிக்கு மாற்றப்பட்டதாக படைத் தரப்பு தெரிவிக்கிறது.

இந்த வீட்டு உரிமையாளர் போர் கால கட்டத்தில் குடும்பத்துடன் இடம்பெயர்ந்து கனடாவில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-122)

# மோசடி செய்த அச்சுவேலி வாசிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 16

சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தகரை ஏமாற்றி மோசடி செய்த அச்சுவேலி வாசியை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மே மாதம் சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தகரிடம் மோட்டார் சைக்கிளை வாங்கி இரண்டு மாதங்களாக அதனை வழங்காமல் ஏமாற்றி வந்த நபரை சாவகச்சேரிப் பொலிஸார் அச்சுவேலியில் வைத்து கைது செய்தனர். குறித்த நபருக்கு எதிராக மோசடி செய்ததாக குற்றஞ் சாட்டி பொலிஸார் சாவகச் சேரி நீதிவான் முன்னிலையில் நபரை முற்படுத்தினர். எதிர்வரும் 29 ஆம் திகதி அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

# உயர்தர வகுப்புக்கான தொழில்நுட்ப பாடநெறி

## 17 பாடசாலைகளில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புகளுக்கென இவ்வாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பப் பாடநெறிக்கான வகுப்புக்கள் வடமாகாணத்தில் 17 பாடசாலைகளில் நேற்றைய தினம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன் பிரதான நிகழ்வு வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு வகுப்பினை ஆரம்பித்து வைத்தனர்.

தொகுதிக்கு ஒரு பாடசாலை என்ற அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயங்களில் தலா 3 பாடசாலைகளிலும் வடமராட்சி வலயத்தில் 2 பாடசாலைகளிலும் தென்மராட்சி மற்றும் தீவக கல்வி வலயத்தில் தலா ஒரு பாடசாலையிலும் தொழில்நுட்ப பாடநெறி வகுப்புகளை வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பித்து வைத்தனர்.

வடமராட்சி கல்வி வலயத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும் முதலாவது வகுப்பை ஆரம்பித்து வைத்தனர். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் 30 ஆண்களும் 3 பெண்களுமாக 33 மாணவர்களும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியில் 28 மாணவிகளும் இணைந்துகொண்டனர்.



தென்மராட்சி சாவகச் சேரி இந்துக் கல்லூரியில் அதிபர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல் கலைக் கழகத் துணை வேந்தர், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மாணவர்களை இணைத்து புதிய கற்கை நெறிகளை ஆரம்பித்து வைத்தனர்.

தீவகக் கல்வி வலயத்தில் வேலணை மத்திய கல்லூரியில் இவ்வகுப்பினை தீவகக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்டன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் ஆகியோர் கலந்து கொண்டு வகுப்பை ஆரம்பித்து வைத்தனர். இக்கல்லூரியில் 24 மாணவர்கள் இப்பாடநெறி வகுப்பில் இணைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இப்பாடநெறிக்குத் தெரிவான 11 பாடசாலைகள் தவிர எஞ்சிய 7 பாடசாலைகள் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன. (வ-8-9)

# இன்பருட்டி கரையில் தரித்துநின்ற மீன் பிடிப்படகு மாயம்

வடமராட்சி, ஜூலை 16

வடமராட்சி வடக்கு இன்பருட்டி கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடிப் படகும் அதனுடன் இணைந்திருந்த யமஹா இயந்திரமும் திருட்டுப் போயுள்ளன.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில் மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து இன்பருட்டியில் வசித்துவரும் சூ.பூலோகசிங்கம் என்ற குடும்பஸ்தரின் படகே இவ்வாறு திருட்டுப் போயுள்ளது.

முதல்நாள் தொழிலுக்கு படகைக்கொண்டு சென்று திரும்பவும் கரையில் நிறுத்தி விட்டிருந்த அதன் உரிமையாளர் நேற்று முன்தினம் ஞாயிறு அதிகாலை தொழிலுக்குச் செல்வதற்காக கடற்கரைக்கு வந்து பார்த்த போது, இயந்திரப் படகைக் காணவில்லை. அது திருட்டுப் போயிருந்தது. (ஒ-8)

# யாழ்ப்பாணம்-பூநகரி இடையேயான தனியார் பஸ்சேவையை அதிகரிக்குக

## பூநகரி பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

வலிதென்மேற்கு ஜூலை 16

பயணத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைத் தவிர்க்கும் வகையிலும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி ஊடாகத் தனியார் பஸ் சேவையை அதிகரிக்குமாறு சம்பந்தப் பட்டவர்களைக் கோரியுள்ள பூநகரி பிரதேச சபை தவிசாளர் வன்னிப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இ.போ.ச. பஸ் சேவையை விரைவாக ஆரம்பிக்குமாறு இ.போ.ச. அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி ஊடாக மன்னாருக்கு தனியார் பஸ் சேவை மட்டும் இடம்பெற்று வருகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் புறப்படும் போதே அதிக பயணிகளுடன் பூநகரிக்கு வருவதால் பூநகரி உட்பட ஏனைய கிராமங்களிலிருந்து மன்னாருக்குச் செல் லும் பயணிகள் பஸ்ஸில் ஏற முடியாமல் திண்டாடுகின்றனர். குறிப்பாக மூடை முடிச்சுகளுடன் வரும் மக்கள் பஸ்ஸில் பயணிக்க முடியாதிருப்பதால். பயணங்களைத் தவிர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அநேகமான பயணிகள் தொங்கு பயணத்தையே மேற்கொள்கின்றனர்.



எனவே வன்னிப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி தனியார் பஸ் சேவையை அதிகரிக்குமாறு தெரிவித்துள்ள பூநகரி பிரதேசசபை தவிசாளர் பயணத்தில் ஏற்படுகின்ற நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இ.போ. ச.பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளார். (வ-115)

## ஆலய வீதிக்கு 'காப்பெற்'

வடமராட்சி, ஜூலை 16

அல்வாய் கிழக்கு மாலி சந்திப் பிள்ளையார் கோயில் தேர் ஓடும் வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்பட்டு வருகின்றது.

நெல்லியடி வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ்.அகில தாஸ் விடுத்த கோரிக்கையை ஏற்று வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உடனடியாக 65 லட்சம் ரூபாவை இதற்கென ஒதுக்கீடு செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து தேர் இருப்பிடத்திலிருந்து தெற்கு வீதி வரை தேரோடும் காப்பெற் வீதி அமைக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய வீதிக்கு காப்பெற் போடும் பணி தற்போது திருவிழா நடைபெறுவதால் தடைப்பட்டுள்ளது. திருவிழா நிறைவுற்றதும் தேர் ஓடும் மிகுதி வீதிக்கும் காப்பெற் இடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)


**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111



**பெண் வேலையாள்கள் தேவை**

மிக்சர் பைக்கிங் செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.

(3094) தொடர்பு:- 0776366723



**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி வளாக வீதியில் ஒரு பரப்புக் காணியில் அமைந்த வீடும் அதனுடன் இணைந்த கட்டடமும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0773126453

(30945) 0777393046



**வேலைக்கு ஆள்கள் தேவை**

சோபாசெற்றி லீசிங் செய்யும் நிறுவனத்திற்கு Marketing வேலை செய்யக் கூடிய முன் அனுபவமுள்ளவர்கள் தேவை. அடிப்படைச் சம்பளம் Rs 8500/=+ மேலதிக வசதிகளுடனும் வழங்கப்படும்.

தொடர்பு: 075 516 7348, 077 589 4100

(37849)(3.8.11)


## வீதியைப் புனரமைத்து வழங்குமாறு திருமுறிகண்டி மக்கள் கோரிக்கை

துணுக்காய்ப் பிரதேசத்தில் பழைய முறிகண்டிக் கிராமத்திலிருந்து கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்து வழங்குமாறு பழைய முறிகண்டிக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதனைப் புனரமைப்பதன் மூலம் கோட்டைகட்டிய குளம், அம்பலப் பெருமாள் குளம் ஆகிய கிராம மக்களுடன் பழைய முறி கண்டி மக்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.இந்த வீதியில் காடுகள் வளர்ந்து மக்கள் போக்குவ ரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளதால் போக்கு வரத்துச் சிரமங்கள் தோன்றி யுள்ளதாக திருமுறிகண்டி கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-12)


**50ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்**



*ஸ்ரீஸ்கந்தராசா தங்கராணி (பாப்பா)*

கைதடிச் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட ஸ்ரீஸ்கந்தராசா தங்கராணி இன்று (16.07.2013) செவ்வாய்க்கிழமை தனது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் கொண்டாடவுள்ளார்.

பாப்பா, பாப்பா என அழைப்போம் 49 வயதைக் கடந்து 50ஆவது வயதில் காலடி வைக்கும் பாப்பாவே பல்லாண்டு காலம் சுகமாக வாழ நவபுரம் துர்க்கை அம்மா அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

கார்த்தி ஸ்ரீஸ்கந்தராசா (கணவர்)
கைதடி அரச முதியோர் இல்ல பணியாளர் மற்றும்
கைதடிவாழ் உறவினர்கள் வெளிநாட்டு உறவினர்கள்



**DANISH REFUGEE COUNCIL** (DRC)

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDP's) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, and emergency relief, assisting IDP's as well as returning populations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Mullitivu and a liaison office in Colombo.

**Field Officer -Technical (Puthukudiyiruppu)**

The Field Officer-Technical will work as a member of the Technical team working under the supervision of the Head of Office in Mullitivu.

The position is based in Puthukudiyiruppu, with frequent travel within the district where DRC has operations.

**Requirements**

- Completed higher education level (Diploma / Bachelors), preferably in fields related to architecture/civil engineering, water and sanitation or construction.
- Excellent written and spoken English is compulsory
- At least 1 year project-based experience in international NGOs/organizations
- Professional experience in construction of shelter, water and sanitation facilities (wells and latrines).
- Strong inter-personal and analytical skills, including good capability in Excel.
- Fluency in written and spoken English.
- Good spoken and understanding of Tamil.
- The ability and a clean/current license to ride a motorcycle would be a distinct advantage.
- Candidates will be required to demonstrate technical competence, initiative and humanitarian motivation.
- Previous experience of working with an international aid agency cr in another multicultural environment would also be an advantage.

**Applicants:**

- Interested candidates are invited to submit their application (cover letter and CV, along with two non-related referees) electronically in Word or PDF format not later than 19th of July 2013 indicating your name and the title of the position in the subject line of the e-mail.
- Applicants should send their applications to recruitment@drc-lk.org or via hardcopy to DRC, No. 77, First Cross Street, Vavuniya. Please note that DRC is not to be held responsible in case of mail transmission or non timely receipt of the application.
- Only short listed candidates will be contacted. The recruitment process will consist of interviews to be held in Vavuniya/Puthukudiyiruupu at the end of coming week.
- Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, DRC also strongly encourages the application of women.

(C/10492)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



அகில இலங்கைத் தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டி இரண்டாம் பிரிவின் கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி

**ஜீவராஜா அபிராமி**

அதிபருடனும், பொறுப்பாசிரியருடனும் காணப்படுகின்றார்.

இவரை பாடசாலை சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.

அதிபர்
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய சமூகம்.

மூளாய். (C/10497)(10.16)



**கிளிநொச்சி மாவட்டம் - பச்சிலைப்பள்ளி**

**திருவருள்மிகு மல்வில் கிருஷ்ணன் கோயில் இயக்கச்சி**



**மண்டல அபிஷேக பூர்த்தியும் 1008 சங்காபிஷேகமும்**

மேற்படி உற்சவம் நாளை (17-07-2013) புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி கிரியைகள், விசேட பூசைகள் நடைபெற்று மதியம் மகேஸ்வரப் பூசையுடன் நிறைவு பெறும். மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி வீதியுலா வரவுள்ளார்.

கௌரவிப்பு, கலை நிகழ்வுகள், விசேட மேளக் கச்சேரி
வி.சித்தார்த்தன் - வி.பிரதித்தன் குழுவினர் (சாவகச்சேரி)

ஆலயத்துக்கு யாழ்ப்பாணம், ஆழியவளை, கோயில் வயல் விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(2717) ஆலய தர்ம கர்த்தா சபை

## விபத்தில் காயம்

அளவெட்டி, ஜூலை 16
சுன்னாகம் கே.கே.எஸ். வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த இராமநாதன் சேதுநாதன் (வயது-55) என்பவரே இவ்வாறு விபத்தில் காயமடைந்தவராவார். இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (வ-36)



இயக்கச்சியை அண்டிய முள்ளியான் புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலியை நிறைவேற்றுவதற்கு வருகை தந்த யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, பங்குத்தந்தை வணபிதா எம்.யேசுரட்ணம் அடிகளார், வணபிதா சதிஸ், வணபிதா சாள்ஸ் அடிகளார் ஆகியோர் ஆரத்தி எடுத்து வரவேற்கப்படுவதையும் திருவிழாவுக்கு வருகை தந்த பக்தர்களையும் காணலாம். (ஒ-51)

## 'புங்குடுதீவு மான்மியம்'

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 16
கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் 'புங்குடுதீவு மான்மியம்' நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் க.குகபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையிடம் இருந்து வர்த்தகர் து.குருநாதசிவம் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் மாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், பேராசிரியர் வி.சிவசாமி யாழ்.மாநகரசபை உறுப்பினர் இ.இராஜதேவன், பேராசிரியர் ந.பேரின்பநாதன், ந.தர்மபாலன் ஆகியோர் உரையாற்றினர். (வ-7)

'காப்பெற்'றாக மாறுகிறது

## விக்ரோறியா வீதி



கொழும்புத்துறை, ஜூலை 16
யாழ்.நகரில் விக்ரோறியா வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட அளவீட்டுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த பகுதியில் இராணுவ முகாம் இயங்கி வந்ததையடுத்து நீண்ட காலமாக திருத்தங்களின்றி இவ்வீதி மிகவும் சேதமுற்றிருந்தது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைப் பார்வையிட வருவோருக்கான நுழைவாயில் இவ்வீதிப் பகுதியில் அமைந்துள்ளது.

இதனால் நோயாளரைப் பார்வையிடச் செல்லும் பெருமளவிலான மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதியின் திருத்தம் தொடர்பாக பலரும் சுட்டிக் காட்டியதையடுத்து புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

## பனை உணவுகளுக்கு புங்குடுதீவில் கிராக்கி


யாழ்ப்பாணம், ஜூலை 16
நாடளாவிய ரீதியில் பனை உற்பத்திப் பொருள்களில் இருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்களுக்கு சிறந்த கிராக்கி உடைய பிரதேசமாக யாழ்ப்பாண மாவட்ட புங்குடுதீவுப் பிரதேசம் விளங்குகிறது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

பனை உற்பத்திப் பொருள்களில் இருந்து சிறந்த உணவுப் பொருள்களைத் தயாரிப்பதில் புங்குடுதீவு பிரதேச உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

தென்னிலங்கையில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர் மக்களும் அதிகமாக புங்குடுதீவு பிரதேச பனைசார் உணவுப் பொருள்களை விரும்புகின்றனர். அவர்களது விருப்பத்துக்கு ஏற்ப உற்பத்தியாளர்களும் சிறந்த உணவுப் பொருள்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றனர்.

வெளிமாவட்டங்களில் அதிகமான புங்குடுதீவு பனை உணவுப் பொருள்களுக்கே கிராக்கி ஏற்பட்டுள்ளது. அத்துடன் சுற்றுலாப் பயணிகளில் அதிகமானோர் தீவகப் பகுதிகளுக்குச் செல்வதால் அங்கு கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களை கொள்முதல் செய்கின்றனர்.

நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப உற்பத்தியாளர்களும் உணவுப் பொருள்களைத் தயாரிக்கின்றனர். அதற்கேற்ப விற்பனையும் இடம் பெறுகிறது எனவும் தெரிவித்தார். (வ-14)



குடத்தனைப் பகுதியில்

# வீடுகளுக்கு இலக்கமில்லை

### தபால் சேவகர்கள் அலைச்சல்



வடமராட்சி, ஜூலை 16
குடத்தனைப் பகுதியில் வீடுகளுக்கு இலக்கங்கள் வழங்கப்படாமையினால் தபால்களை விநியோகிப்பதில் தபாற் சேவகர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள வலிக்கண்டி, மணற்காடு, குடத்தனை வடக்கு, மேற்கு, பொற்பதி, மாளிகைத் திடல் அம்பன், கொடியோடை ஆகிய கிராமப் பகுதிகள் குடத்தனை தபால் நிலையத்தின் கீழ் வருகின்றன.

இந்தக் கிராமங்களில் உள்ள வீடுகளுக்குப் பிரதேச சபை இலக்கங்களைப் பொறிக்காமையினால் உரியவர்களுக்குத் தபால்களை வழங்க அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க சிரமங்களை எதிர்கொள்வதுடன் தபால் விநியோகத்தில் கால தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடத்தனைப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் இலக்கம் வழங்கப்படுதல் அவசியம் எனக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ஒ-8)

## 30 வருடங்களின் பின் வீதிக்கு விமோசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 16
வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மல் லாகம் பகுதியில் 30 வருட காலமாகப் புன ரமைப்பின்றி சேதமடைந்திருந்த கோவில் குறுக்கு வீதிக்கு விடிவுகாலம் கிட்டியுள்ளது.

வீதியின் நிலை தொடர்பாக பல்வேறு தரப்புகளிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்த போதும் 30 வருடங்களாக அதே நிலைமையுடனே குறித்த வீதி இருந்து வந்துள்ளது.

இதனால் வீதியால் பயணிப்போர் பலர் விபத்துக்கு உள்ளாவதுடன் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இந்த நிலையில் வலி. வடக்கு பிரதேச சபையின் முயற்சியால் குறித்த வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. வீதிக்கு விமோசனம் கிடைக்கப் பெற்றுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் நன்மையடைதுள்ளனர். (வ-14-86)

## தீவகத்தில் இன்று நடமாடும் சேவை கண்சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 16
விஷன் 20 20 திட்டத்தின் அனுசரணையில் தீவகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை கண் சிகிச்சை நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

கண் வைத்திய நிபுணர்கள் கலந்து கொள்ளும் இந்த நடமாடும் சேவை இன்று காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளதாக ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பு.அருணபுண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

நாளை புதன்கிழமை வேலணை பிரதேச வைத்தியசாலையிலும் காலை 8 மணிக்கு நடமாடும் கண்சிகிச்சை இடம்பெறும். அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு புங்குடுதீவு வைத்தியசாலையிலும், வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நயினாதீவிலும், பி.ப. 2 மணிக்கு அனலைதீவிலும், வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு காரைநகரிலும் பிரதேசவைத்தியசாலைகளில் நடமாடும் சேவை கண்சிகிச்சை இடம்பெறவுள்ளது. (வ-7)

## ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவது அவசியம்

### வரணி வைத்தியசாலை பொறுப்பதிகாரி கருத்து

யாழ்ப்பாணம், ஜூலை 16
சிறு குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை எவரையும் நோயில் இருந்து பாதுகாத்து உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு போசாக்கான உணவு அவசியம். இதனை நாம் பின்பற்றி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க வேண்டும் என்று வரணி பிரதேச வைத்திய சாலையின் பொறுப்பதிகாரி வீ.ஆறுமுகம் தெரிவித்தார்.

சுகாதாரப் பணிமனையின் அனுசரணையுடன் வரணி வைத்தியசாலையில் இடம்பெற்ற போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது:-

12 கிராமங்களை உள்ளடக்கி சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பயன் பெறும் வகையில் அன்னையர் கழகங்கள் இந்தக் கண்காட்சியை முன்னெடுத்துள்ளன. குறிப்பாக போசாக்கு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகவுள்ளது. போசாக்கு முறைமையை சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள்வரை பின்பற்றுவதன் ஊடாக நோயில் இருந்து விடுபடலாம்.

தற்போது வரணி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளதுடன் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு நீர்வழங்கல் சேவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனை விட வைத்தியசாலைக்கான சுற்று மதில், ஆண் நோயாளர் விடுதி போன்றவை அமைக்கப்பட வேண்டிய தேவையும் உள்ளது.-என்றார். (வ-14-122)

## ஒளி பெற்றன அளவெட்டி வீதிகள்

அளவெட்டி, ஜூலை 16
அளவெட்டி தெற்கு பகுதியில் உள்ள வீதிகளுக்கு வலி.வடக்கு பிரதேச சபையின் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. வீதிகளின் பிரதான சந்திகள் இனங்காணப்பட்டு அவை பொருத்தப்பட்டன.

அளவெட்டி தெற்கு, அடவம்பற்று வீதி, மாரியம்மன் வீதி, இராமலிங்கம் வீதி, அருணாசலம் பாடசாலை வீதி ஆகியன இதன் மூலம் இரவு வேளைகளில் ஒளி பெற்றுள்ளன. (வ-36)

உதயன்
16/07/2013

# இந்தியா நிச்சயம் தட்டிக் கேட்கும்

## இலங்கை விவகாரம் தொடர்பாக மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன்

சென்னை, ஜூலை 16

தமிழர்களுக்கு சம உரிமை வழங்காது செயற்பட இலங்கை அரசு முயற்சிக்குமானால் நிச்சயம் அது குறித்து இந்திய அரசு தட்டிக் கேட்கும் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர்ஜி.கே.வாசன்.

சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று காமராஜரின் 111 ஆவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டது. அங்கு வந்திருந்த மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் காமராஜரின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மரியாதைசெலுத்தினார்.

அதன்பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"ராஜிவ்காந்தி - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் இலங்கைத் தமிழர் களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும்என்றஅடிப்படையில் உருவாக்கப்பட்டது.

அந்த சாராம்சத்தை மீறி இலங்கை அரசு செயற்பட முயற்சித்தால் இந்திய அரசு அனுமதிக்காது.

இலங்கை அரசு கொண்டு வரும் திருத்தங்களையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இந்திய அரசு நிச்சயம் இலங்கையைத் தட்டிக் கேட்கும்" என்று தெரிவித்தார். (ற)

## அரியவகை உயிரினங்கள் சோதனையில் மீட்கப்பட்டன

### இலங்கைக்கு கடத்தப்படவிருந்ததாம்

சென்னை, ஜூலை 16

தமிழ்நாடு, இராமேஸ்வரத்தில் சங்கு சுத்தப்படுத்தும் நிறுவனம் ஒன்றில் மத்திய அரசால் தடை செய்யப்பட்ட அரிய வகை கடல் வாழ் உயிரினங்களான கடற் பல்லிகள், கடற் சிப்பிகளை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவை இலங்கைக்குக் கடத்தப் படவிருந்தன என்றும் தெரி. விக்கப்படுகின்றது.

மத்திய அரசால் தடை விதிக்கப்பட்டுள்ள கடற் பல்லிகள், கடல் சிப்பிகள் இலங்கைக்கு கடத்தப்படுவதற்காக மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று வனத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது தடை செய்யப்பட்ட அரிய வகை கடல் வாழ் உயிரினமான கடற் பல்லிகள் 50 கிலோ, வெண் சிப்பிகள் 60 கிலோ இருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும், விசாரணையில் அவர்கள் கடல் சிப்பிகள், பல்லிகள் ஆகியவற்றை இலங்கைக்கு கடத்த இருந்ததாகத் தெரிவித்துள்ளனர். (ற)

## இந்திய எல்லைக்குள் சீனக் ஹெலி

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சுமர் பகுதியில் 2 சீன ஹெலிகெப்டர்கள் ஊடுருவி சென்றுள்ளமை கண்காணிப்பு கமராக்களில் பதிவாகியுள்ளதால் அடுத்துப் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் லடாக் பகுதியில் கடந்த 17ஆம் திகதி சீன இராணுவத்தினர் ஊடுருவியிருந்தனர். தற்போது மீண்டும் சீன இராணுவத்துக்குச் சொந்தமான 2 ஹெலிகள் அதே சுமர் பகுதியில் ஊடுருவியுள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

## "இலங்கையை புறக்கணிப்போம்"

### ஆந்திராவில் தமிழர்கள் முழக்கம்

புதுடில்லி, ஜூலை 16

ஐதராபாத்தில் நடைபெற்ற கண்காட்சியில் இலங்கை சுற்றுலாத்துறை கலந்து கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கண்காட்சி நடைபெற்ற இடத்தில் கூடிய தமிழர்கள் இலங்கையை புறக்கணிப்போம் என்னும் பரப்புரையை மேற்கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

இலங்கைப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த காட்சியறைக்கு முன்னாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட தமிழர்கள், கைகளில் பதாதைகளை ஏந்தியவாறு, இலங்கையை எதிர்த்துக் கோசங்களை எழுப்பினர்.



அத்துடன், "என்ன செய்யலாம் இதற்காக?" என்ற புத்தகத்தின் மூலம் இலங்கை அரசு தமிழர்கள் மீது கட்ட விழ்த்துவிட்ட கொடூரங்களை அங்கிருந்த மக்களுக்கு விளக்கியதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மகனான பாலச்சந்திரன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக படங்களையும் அவர்களுக்குக் காண்பித்தனர்.

அதையடுத்து அங்கிருந்த மக்களும், ஊடங்கங்களைச் சேர்ந்த சிலரும் போராட்டத்தில் இணைந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் அரைமணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற போராட்டத்தின் பின்னர், அங்கு வந்த பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து இலங்கைப் பொருள்களை காட்சிப்படுத்தியிருந்த காட்சியறை மூடப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் அனைவரும் மென்பொருள் வடிவமைப்பாளர்கள் என்று கூறப்படுகின்றது. (ற)


24 வது வீரமக்கள் தினம்

13.07.2013 - 16.07.2013







அமரர்.அ.அமிர்தலிங்கம்
செயலாளர் நாயகம் - தமிழர் விடுதலைக் கூட்டணி

அமரர் தோழர் க.உமாமகேசுவரன்
செயலதிபர்-புளொட்

ஓர் அணியாய் நிற்போம்!
உரிமைகளை வென்றெடுப்போம்!!

விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஈந்த கழக கண்மணிகள், அனைத்து போராளிகள், பொதுமக்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)

# ஈரானிடம் அணு ஆயுதங்கள்

## உலகநாடுகளை எச்சரிக்கின்றது இஸ்ரேஸ்

ஜெருசலேம், ஜூலை 16

"ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் முனைப்புடன் செயற்பட்டுவருவதுடன், கட்டுப்பாடற்ற அணு ஆயுத உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகின்றது. இது விடயத்தில் உலகநாடுகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்" – இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு.



எகிப்து, சிரியா போன்ற பிரச்சினைகளில் கவனத்தை திருப்பியுள்ள உலக நாடுகள் ஈரானின் செயற்பாடுகளைத் கவனிக்கத் தவறிவிட்டன.

உலக நாடுகளின் முழுக் கவனமும் தற்போது எகிப்து மற்றும் சிரிய களநிலவரங்களில் திரும்பியிருக்கும் தருணத்தில் ஈரான் சத்தமில்லாது அணு ஆயுதத் தயாரிப்புகளில் மும்முரமாக இறங்கியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஈரான் வரம்பு மீறி அணு ஆயுதத் தயாரிப்புகளில் ஈடுபட்டு வருகின்றது. உலக நாடுகளை நான் எச்சரிக்கின்றேன். ஈரான் அணு ஆயுதத் தயாரிப்புடன் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைத் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளது. உலகநாடுகள் இதுவிடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்காதுவிடில் ஈரான்மீதுதாக்குதல்நடத்துவது குறித்து இஸ்ரேல் சிந்திக்க வேண்டியிருக்கும்." என்று அவர் தெரிவித்துள்ளார்.(ற)

## உரிமைக்காக போராடியவள்: அவ்வாறே அழையுங்கள்

### சிறுமி மலாலா தெரிவிப்பு

லண்டன், ஜூலை 16

தலிபான் அமைப்பினரால் சுடப்பட்டவர் என்று அழைக்கப்படுவதை விட, உரிமைக்காகப் போராடியவள் என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றேன் என்று பெண்களின் கல்வி உரிமைக்காகக் குரல் எழுப்பிய சிறுமி மலாலா தெரிவித்துள்ளார்.



சிறுமி மலாலா பாகிஸ்தானில் பெண்களின் கல்வி உரிமைக்காக குரல் கொடுத்தவர். அதன் காரணமாக தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, தீவிர சிகிச்சைகளின் பின்னர் தற்போது உடல் நலம் தேறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான பாகிஸ்தான் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டபோதேமலாலா இவ்வாறு தெரிவித்ததுடன், தொடர்ந்தும் பெண்களின் உரிமைக்காகப் போராடவுள்ளதாகவும் கூறினார்.(ற)

## 'ஜீன்ஸ்' அணிந்தால் தண்டனை

### தலிபான்கள் எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஜூலை 16

பெண்கள் 'ஜீன்ஸ்' மற்றும் மெல்லிய கவர்ச்சியான ஆடைகள் அணிந்தால் கடும் தண்டனை வழங்கப்படும் என்று பாகிஸ்தானில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தலிபான்கள் அமைப்பு அங்கு விடுத்துள்ள துண்டுப் பிரசுரங்களிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தலிபான்கள் நீண்ட துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளார்கள்

"ரம்லான் நோன்புக் காலத்தை முன்னிட்டு கவர்ச்சியான ஆடைகளை அணிவதைப் பெண்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மெல்லியதான ஆடைகள் மற்றும் 'ஜீன்ஸ்' அணிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறான ஆடைகள் அணிபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்." என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி ஆடை விற்பனையாளர்கள் மற்றும் தைத்துக் கொடுப்பவர்களுக்கும் தலிபான் அமைப்பினர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

இறுக்கமான மெல்லிய ஆடைகளைத் தைத்துக் கொடுப்பவர்களுக்கும் அல்லது விற்பனை செய்பவர்களுக்கும் கடும் அபராதத்துடன் சேர்த்து தண்டனை வழங்கப்படும். என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)





நேற்றுமுன்தினம் பிரான்ஸில் தேசிய தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தேசிய தின நிகழ்வுகளில் இடம்பெற்ற இராணுவ அணி வகுப்பின்போது, கலந்துகொண்ட பிரான்ஸ் குடியரசு குதிரைப் படையினரின் அணிவகுப்பு.



## நிலவில் பூங்கா: திட்டமிடுகின்றது அமெரிக்கா

நியூயோர்க், ஜூலை 16

நிலவில் பூங்கா அமைக்கும் முதற்கட்ட முயற்சிகளில் இறங்கியுள்ளது அமெரிக்கா.

'அப்பலோ லூனர் லாண்டிங் சைட்' என்ற பெயரில் உருவாக்கப்படவுள்ள அந்த பூங்கா தொடர்பான திட்டத்துக்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும் வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

அதையடுத்து இந்தத் திட்டம் தொடர்பான பிரேரணை தற்போது அமெரிக்க விண்வெளி அமைப்பு மற்றும் இயற்கை வள அமைப்பு என்பனவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



## போராடி இறந்தோரை விட தற்கொலைகளே அதிகம்

### பிரிட்டன் இராணுவத்தின் புள்ளிவிவரம்

பிரிட்டன், ஜூலை 16

பிரிட்டிஷ் படைகளில் தற்கொலை செய்து கொண்டுள்ள வீரர்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டில் ஆப்கன் மோதல்களின் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையிலும் அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2012ஆம் ஆண்டில் பணியிலிருந்த பிரிட்டன் படைவீரர்களும் முன்னாள் வீரர்களும் அடங்கலாக 50 பேர் வரையில் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இதே ஆண்டில் ஆப்கனில் தலிபன்களுடனான மோதல்களின் போது 44 படைவீரர்கள் மட்டுமே உயிரிழந்துள்ளனர்.

போதுமான ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்காததாலேயே, படைவீரர்கள் பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று அவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர். 'இந்த ஒவ்வொரு தற்கொலையும் ஒரு பெருந்துயரம் என்று பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (ற)

## பொதுமக்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்ட சீன அணுத் திட்டம்

பீஜிங், ஜூலை 16

பொதுமக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து யுரேனியம் செறிவூட்டும் ஆலை அமைக்கும் திட்டத்தை கைவிட சீன அரசு முடிவு செய்துள்ளது.

சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள குயாங்டோங் மாகாணத்தில் யுரேனியம் செறிவூட்டும் ஆலை அமைப்பதற்கு அந்நாட்டின் தேசிய அணு சக்தி கழகம் திட்டமிட்டது.

அதற்காக சுமார் 90 ஆயிரம் கோடி ரூபா செலவில் 230 ஹெக்டேர் நிலம் கையகப் படுத்தப்பட்டது.

அரசின் இந்த நடவடிக்கைக்கு அந்தப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

மக்களின் எதிர்ப்பு அதிகரித்ததை அடுத்து ஆலை அமைக்கும் திட்டத்தை கைவிட்டுவிட்டதாக ஹெஷான் நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

பொதுமக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் நகர நிர்வாகம் தேசிய அணுசக்தி கழகத்தின் திட்டத்தை முன்னெடுத்து செல்லாது என்று நகர நிர்வாகம் தெரிவித்துள்ளபோதும், இந்த விடயம் குறித்து சீன தேசிய அணுசக்தி கழக அதிகாரிகள் கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. (ற)

## கூரையைப் பிய்த்து விழுந்த மாடு படுத்திருந்தவரின் உயிரைப் பறித்தது

பாரிஸ், ஜூலை 16

கூரையைப் பிய்த்துக்கொண்டு அதிர்ஷ்டம் வரும் என்பார்கள். ஆனால் கூரையைப் பிய்த்துக் கொண்டு விழுந்த மாட்டால் வீட்டில் படுத்திருந்தவரின் உயிர் பிரிந்தது.

இந்தச் சம்பவம் பிரேஸிலில் இடம்பெற்றுள்ளது. சிறிய மலைக்குன்றின் சரிவில் வசித்து வந்தவர் மரியா டிசோசா. அவர் ஒருநாள் மனைவியுடன் உறங்கிக் கொண்டிருந்தபோது திடீரென கூரையைப் பிய்த்துக் கொண்டு பசுமாடு ஒன்று அவர் மேல் விழுந்தது. அதில் அவர் உயிரிழந்தார். மலைக்குன்றில் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடே தவறி வீட்டுக்குள் விழுந்துள்ளது என்கின்றனர் பொலிஸார்.(ற)

அகில இலங்கை பரஸ்பரசகாய நிதிச் சங்கம் வ-து
வட்டுக்கோட்டை
அங்கத்தவர் மேலதிக கொடுப்பனவு தொடர்பான
## விசேட அறிவித்தல்

மேற்படி சங்க அங்கத்தவர்கள் தமது அங்கத்துவ வைப்புப் புத்தகம், தேசிய அடையாள அட்டை போன்ற சான்றாதாரங்களுடன் அவரவர் நேரில் வந்து உங்கள் வைப்புப் பணங்களை **விசேட வட்டியுடன்** மீளப் பெறலாம்.

முன்பே கட்டுப்பணங்களைப் பெற்றவர்களின் சான்றாதாரங்கள் எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அவர்களும் வட்டிப் பணங்களை மேலதிகமாகப்பெறலாம். அவ்வாறே சேமிப்பில், நிலையான வைப்பில் மாத வட்டியில் வைப்பிலிட்ட அனைத்து அங்கத்தவர்களுக்கும் சித்தன்கேணியில் உள்ள வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு எதிர்ப்புறமுள்ள எமது தற்காலிக அலுவலகத்துக்கு நேரில் வந்து, ஜூலை (ஆடி) மாதம் 16ஆம் திகதி தொடக்கம் உங்களுக்கு சேர்மதியான பணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை. வாய்ப்பைத் தவறவிடாது உரிய பணத்தை தவறாது பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 149 5631

இ. ஆனந்தராசா
நிர்வாக செயலாளர்



சங்கானை
செங்கற்படை
மகாதேவப் பிள்ளையார்
தேவஸ்தானம் - 2013
நான்காம்
திருவிழா

(க/9767)(2-6.3)

நால் வேத நாயகனே நால்வாய் ஐங்கரனே
நல்ல தொரு துணையாய் நாகு அடியவர் கூடும்
நாற்பாத சேபிதத்தால் நயந்தனுகும் முத்திநிலை
நாலும் நாளின்று நாலாம் திருநாளில் நயந்தே அருள்வாய்.
ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர் :
அமரர் கந்தையா இராமலிங்கம் நினைவாக
4 ஆம் திருவிழா உபயகாரர், தொட்டிலடி, சங்கானை.

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த
Koyo
Value & Technology
MADE IN JAPAN
KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO
(C/10380)
எப்பொழுதும் நாம் உங்களுடன்
ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

### அக்கராயன் விவசாயிகள் எதிர்ப்பு

கிளிநொச்சியை கமநலசேவை நிலையத்தைச் சேர்ந்த உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி அக்கராயன் பகுதியில் உழவு வேலைகளில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கராயன் கமநலசேவை நிலையத்தில் தேவையான அளவு உழவு இயந்திரங்கள் உள்ள நிலையில் கிளிநொச்சி கமநல சேவை நிலையங்களுக்குரிய உழவு இயந்திரங்களை அக்கராயன் பகுதியில் உழவு வேலைகளில் ஈடுபடுத்துவது தொடர்பாகவே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இது தொடர்பாக கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம் பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்திலும் குரல் எழுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்த நிலையில் உழவு இயந்திரங்கள் எந்தப் பகுதிக்குரியன என்பதைக் கண்டறியும் பொருட்டு அடையாளங்கள் இடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறியக் கூடியதாக உள்ளது.

(க-18)

Nikon
இலங்கையில் பிரபலமான
புகைப்படக்கருவி
மிகக்குறைந்த விலையில்

D3200 + 18-55mm VR
ரூ.80,000/- மட்டும்
உத்தரவாத சான்றிதழுடன்
ஏக விநியோகத்தர்
PhotoTECHNICA
விஹறாணி : 0710-556556

### மின்தடை

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின்தடை பற்றிய அறிவித்தலுக்கு மேலதிகமாக உயர் அழுத்த டிரார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை மறுதினம் வியாழக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோயில் பிரதேசத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(ஒ)

மாணவர்களே! உங்கள்
O/L
வெற்றிக்கான கையேடு
இதோ!
வெளிவந்துவிட்டது
STEP 11




எதிர்பார்க்கை
வினாத்தாள்கள்
உள்ளடங்கலாக

தமிழ்
ஆங்கிலம்
கணிதம்
விஞ்ஞானம்
வரலாறு
வர்த்தகம்
சிங்களம்
சித்திரம்
மாதிரி
வினாத்தாள்

பாராட்டுக்குரிய
மனோகரன் நிருஷனின்
வாழ்த்தும்
அனுபவப்பகிர்வும்
20 ஆம் பக்கத்தில்...

சிறப்புத் தேர்வு
எழுதுவது எப்படி?

(C/10379)

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்
தொடர்புகளுக்கு - 077 2374191, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

### காணி விற்பனைக்கு

யாழ். பிரதான வீதிக்கு அருகில் 4 ஆம் குறுக்குத் தெருவில் 1½ பரப்பு வீடு வளவு விற்பனைக்குண்டு.
T.P: 077 116 3556
(30927)(3.6.11)

### விற்பனைக்கு

பாவித்த பழைய ஜன்னல்கள், கடைகளுக்கு பாவிக்கத்தக்க கதவுகள், பனஞ்சிலாகை, பொலிகற்கள் என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 7120 945
(30894)(3.6.11)

### தரம் 1 - 2 வகுப்புகள்

அனுபவமிக்க ஆசிரியர்களால் தரம் 1, தரம் 2 வகுப்புகள் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகின்றன. பெயர்ப் பதிவுகள் ஏற்கப்படுகின்றன.
The Express Institute
Irupalai Junction-Kopay
(c/10483)(3.6.11)

### Toyota Hilux Pickup
விற்பனைக்கு

Vigo (G Grade, 4 doors) 2007 Model ஓட்டத்துடன், விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 729 1577
(30892)(3.6.11)

### தவறிவிட்டது

முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த ஆரோக்கிய நாதர் ஜெனோவா என்பவரது தேசிய அடையாளஅட்டையும் (666612256V), பல ஆவணங்களும் கறுத்த நிறப் பேசுடன் கடந்த 12.07.2013 அன்று கொடிகாமம் பஸ்ஸில் பயணம் செய்தவேளை யாழ்ப்பாணத்துக்கும் அரியாலை மாம்பழம் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 077 636 5733

### கார் விற்பனைக்கு

NP KU-xxxx தொடரிலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள United motors Elite viva white color manual Gear கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 077 222 5531
(30738)(10,6,3)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் நல்ல சூழலில் 2 பரப்பு 1½ குளியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 4 அறைகள் கொண்ட சகலவசதிகளுடன் பெரிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு- 0772968338, 0217900014
(30912)(3.6)

# அராலி - வேலணை கடற்பாதை புனரமைப்பில் அரச அதிபர் அதிக அக்கறை காட்ட வேண்டும்

## வலி.தென் மேற்கு சமாசத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16
தீவகத்தையும்-வலிகாமத்தையும் இணைக்கும் அராலி - வேலணை கடற்பாதை புனரமைப்பில் யாழ்.அரச அதிபர் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும்.

கடந்த 30 வருடகாலமாக பயன்பாடின்றி உள்ள அராலி - வேலணை கடற்பாதை வீதி அபிவிருத்தி குறித்து மூன்றாவது அரச அதிபரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கின்றேன் என்று வலி.தென் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத் தலைவர் ச.செல்வரத்தினம் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் இந்த விடயம் சம்பந்தமாக கடிதம் சமர்ப்பித்து உரையாடிய பின் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
மேற்படி பாதையின் புனரமைப்புக்கு முன்னாள் யாழ். அரச அதிபர் க.கணேஷ் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளரிடம் இருந்து மதிப்பீட்டைப் பெற்று ஜெய்க்கா திட்டத்தில் நிதிபெறுவதற்கு முயற்சித்தார்.

அதனைத் தொடர்ந்து இது வரை மேற்படி வீதி அபிவிருத்தி குறித்து எவரும் அக்கறை காட்டவில்லை.

வேலணைப் பிரதேச சபையும், வலி.மேற்கு பிரதேச சபையும் காலத்துக்குக் காலம் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

நல்லூரில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா அராலி- வேலணை கடற்பாதை புனரமைப்பு ஏன் தாமதமாகிறது.

இந்த வீதி அபிவிருத்தியை 2013-2014 காலப் பகுதியில் புனரமைத்து தர விசேடமாக நிதி ஒதுக்கித் தர அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வர வேண்டும் என கேட்டிருந்தார்.



மேலும் கிளிநொச்சியில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த வீதி அபிவிருத்தி ஏன் தாமதமாகிறது என இணைத் தலைமையிடம் கேட்கப்பட்டிருந்தது.

இவ்வாறாக யாழ்.பொது அமைப்புகளும், பொது மக்களும் கூடுதல் அக்கறையுடன் செயற்படும் போது இந்த வீதி அபிவிருத்தி செயற்பாட்டுடன் தொடர்புபட்டவர்கள் மௌனமாக இருப்பது வருந்தத் தக்கது.

எனவே பல வர்த்தக, சமூக, கலாசார மற்றும் ஆன்மிக, சுற்றுலா என பல்வேறு வழிகளிலும் தொடர்புபடும். மேற்படி அராலி - வேலணை கடற்பாதை அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் முக்கியத்துவம் வழங்கி அபிவிருத்தியில் அரச அதிபர் முன்னிற்க வேண்டும். - என்றார். (எ-50)

# இருபதுக்கும் மேற்பட்ட முதலீட்டாளர் இணைவு

## பனை அபிவிருத்திச் சபையுடன்

யாழ்ப்பாணம், ஜூலை 16
சர்வதேச நாடுகளுடன் தொடர்புடைய இருபதுக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
நவீன வடிவமைப்புகளுடன் கூடிய இயற்கைப் பொருள்களை சர்வதேச நாடுகள் விரும்புவதாலும்,பிளாஸ்ரிக் பொருள்களுக்கான கிராக்கி குறைவடைந்துள்ளதாலும் இதனைவாய்ப்பாகக் கொண்டு சர்வதேச சந்தையில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

குறிப்பாக பனம் பொருள்களில் இருந்து அழகு சாதனப் பொருள்களைத் தயாரித்து அவற்றை நவீன வடிவமைப்புகளில் சர்வதேச நாடுகளில் சந்தைப்படுத்த முடியும்.

சூழல் மாசடைவதில் இருந்து பாதுகாப்பதற்காக எளிதில் பசளையாகக் கூடிய இயற்கையான பொருள்களை சர்வதேச நாடுகள் விரும்புவதாக முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் பனை அபிவிருத்திச் சபையுடன் தற்போது 20 இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் தொடர்பில் உள்ளனர்.

இவர்கள் ஊடாக சர்வதேச நாடுகளுக்கு பனை சார் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்து அதனூடாக உள்ளூர் உற்பத்தியாளர்களது வருமானத்தை உயர்த்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (வ-14)

# பனை உற்பத்தித் தொழிலில் 75 ஆயிரம் குடும்பங்கள்

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில்

யாழ்ப்பாணம், ஜூலை 16
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பனை சார் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

பனைவளம் நாடளாவிய ரீதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவில் உள்ளது. அந்த வகையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பனை வளத்தை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பனை சார் தொழில்களை மேற்கொள்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரம் குடும்பங்கள் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு சிறு சுவடுகள் எனும் அமைப்பின் ஊடாக பனைசார் உற்பத்தித் தொழில்களை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை 25 ஆயிரம் குடும்பங்கள் வாழ்வாதாரத் தேவைகளுக்காக பனை வளத்தை நம்பியுள்ளனர்.



பனைசார் உற்பத்தித் தொழில் முயற்சிகளை மேற்கொள்வோரை பனை அபிவிருத்திச் சபை கண்காணித்து, அவர்களுக்கான தொழில் முயற்சிக்கான ஆலோசனைகளையும், உதவிகளையும் மேற்கொண்டு வருகிறது.

கிடைக்கும் பனை வளத்தை பாதுகாத்து மேலும் அபிவிருத்தியை அடைதலே இதன் நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார். (வ-14)

# சிறுவர் மீதான வன்முறைகளுக்கு சவால் கொடுக்க வேண்டிய நிலை

## சிறுவர் அபிவிருத்தி இணைப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 16
வடமாகாணம் போருக்கு பின்னரான சூழலில் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் சிறுவர் மீதான வன்முறைகளுக்கும் சவால் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம் என்று லீட்ஸ் நிறுவனத்தின் வடக்கு, கிழக்கு மாகாண சிறுவர் அபிவிருத்தி இணைப்பாளர் ரஞ்சித்குமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகமும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து நடத்திய சிறுவர் நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு கடந்த 12 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்கள் மீதான வன்முறைகள், பெண்களுக்கான பாதுகாப்பு என்பவற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. போருக்கு பின்னரான காலத்தில் நாம் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். சிறுவர் மீதான வன்முறைகள் மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடன் வடமாகாணபாடசாலைகளுக்கிடையில் விவாதப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த பேச்சாளர்கள் தெரிவு செய்யப்பட்டு நாடாளு மன்றத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

27 பாடசாலைகள் பங்கு பற்றிய இந்த விவாதப் போட்டியில் கிளிநொச்சி திரேசா பெண்கள் பாடசாலையும், யாழ்.வேம்படி மகளிர் பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டன. அவர்கள் சிறுவர் நாடாளுமன்றம் ஊடாக சிறுவர்களது உரிமைகள் பாதுகாப்புக்கள் தொடர்பாக விவாதிப்பர் என்றார்.

இந்த அமர்வின் போது தெரிவு செய்யப்பட்ட சிறந்த பேச்சாளர்கள் சிறுவர்உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் எவ்வாறான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது குறித்து விவாதித்தனர். (வ-14)

# ஜிஐசற் வடக்கில் தனது பணிகளை டிசெம்பரில் பூர்த்தி செய்து வெளியேறும்

## நிறுவன ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16
ஜிஐசற் ஜேர்மன் தொண்டு நிறுவனம் வடக்கில் தனது பணிகளை எதிர்வரும்டிசெம்பரில் பூர்த்தி செய்து வெளியேறும்.

இதுவரைகாலமும் ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தி திட்டமிடலுக்கு பங்களித்து வெற்றி பெறச் செய்த அதிகாரிகளை நான் பாராட்டுகின்றேன் என்று ஜேர்மன் ஜிஐசற் நிறுவன சிரேஷ்ட நிபுணத்துவ ஆலோசகர் வோட்டர் கெலர் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே வோட்டர் கெலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி. மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் அதிகாரி வி.சிவகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் (ILDP) என்ற முன்னோடி நிகழ்வை வடக்கில் வேலணை, சங்கானை, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் முன்னெடுத்தோம்.

இதற்காக பிரதேச சபைகளும், பிரதேச செயலகமும் முழு உத்வேகத்துடன் பணிகளை ஆற்றியுள்ளன.

இத்திட்டத்தை ஏனைய நிதி நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்த வேண்டும்.

இதற்காக மேலும் உழைக்க வேண்டி வரும். தயாரித்து முடிக்கப்பட்ட திட்ட வரைபுகளை ஏனைய நிதிவழங்கும் முகவராண்மை நிறுவனங்களுக்கும் ஏனைய திணைக்களங்களுக்கும் செய்திப் பரம்பல் செய்ய வேண்டும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் எமது தொண்டு பணிகளை பூர்த்தி செய்து வெளியேறுவோம் என்றார்.

வோட்டர் கெலர் ஐஎல்டிபி தொடர்பான "சிடி"களை வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நா.ஜங்கரனிடம் வழங்கினர். (எ-50)

உதயன் 16/07/2013

## மட்டக்களப்பில் கஞ்சாவுடன் ஐவர் மாட்டினர்


மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட பொலிஸ் நாயின் போதைப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே இந்தச் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட கஞ்



சாவுடன் சந்தேகநபர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது 5 சந்தேக நபர்களும் 62,000 ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ஒல்லாந்தர் கோட்டை அழகுபடுத்தல் ஆரம்பம்



மட்டக்களப்பு,ஜூலை 16

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட கோட்டையின் அழகுபடுத்தல் பணிகள் 30 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட அரச அதி பர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

இந்தக் கோட்டையிலேயே மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அமைந்துள்ளது.

தற்போது கோட்டையின் மேல்தள பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டு, சமப்படுத்தப்பட்டு, கோட்டைச் சுவர்களில் வளர்ந்திருந்த மரங்கள், பற்றைகள் அகற்றப்பட்டு, சீர் செய்யப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். (ச)

# ‘13’ ஐ திருத்துவதற்கு கூட்டமைப்பு எதிர்ப்பு

### கிழக்கு மாகாணசபையில் 23 இல் பிரேரணை



திருகோணமலை,ஜூலை 16

கிழக்கு மாகாண சபையில் எதிர்வரும் 23ஆம் திகதி அரசமைப்பு சட்டத்துக்கான 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்ளும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், கூட்டம் நடைபெறுவதற்கு முதல் நாள் ஒன்று கூடி இது குறித்து முடிவெடுப்பார்கள் என்று மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

அரசமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிராக கொண்டு வர இருக்கும் பிரேரணைக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கிழக்கு மாகாண சபையிலுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து வாக்களிப்பார்கள் என்று அவர் கூறினார்.

இதேவேளை 13ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளது.

> ❝ சிறுபான்மையினரின் நலன்களுக்கு அச்சுறுத்தலாகவுள்ளதைக் கருத்திற் கொண்டு மு.கா. பிரேரணையை கொண்டு வரவுள்ளது.

இதுகுறித்த பிரேரணையை விரைவில் கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கவுள்ளோம் என்று மு.கா. பொதுச் செயலர் ஹஸன் அலி தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்வது சிறுபான்மையினரின் நலன்களுக்கு அச்சுறுத்தலாகவுள்ளதைக் கருத்திற்கொண்டு மு.கா. பிரேரணையை கொண்டுவரவுள்ளது என்று அவர் கூறினார். (ச)



மட்டக்களப்பு, களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது பெருந்திரளான பத்தர்கள் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பு விவசாயிகளின் பிரச்சினை குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு,ஜூலை 16

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்கான விசேட கூட்டம் திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக மண்டபத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் கே. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன். செல்வராசா, மாவட்ட செயலக விவசாயப் பணிப்பாளர் ப.உலகநாதன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயம் தொடர்பான பிரச்சினைகள் விரிவாக ஆராயப்பட்டன. (ச)

## அம்பாறைக்கு மேலதிக அரச அதிபராக விமலநாதன்

அம்பாறை, ஜூலை 16

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபராக மட்டக்களப்பைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி விமலநாதன் பதவியேற்றுள்ளார்.

கிழக்கு மாகாண தபால்மா அதிபராக சுமார் ஐந்து மாதங்கள் கடமையாற்றிய பின்னர் மேலதிக அரச அதிபராகப் பதவியேற்றுள்ள இவர் , 1991 ஆம் ஆண்டு முதல் ஒருவருட காலம் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலராகவும், பின்னர் 12 வருடங்கள் ஏறாவூர் பிரதேச செயலராகவும், 5 வருடங்கள் வவுணதீவு பிரதேச செயலராகவும் பணி யாற்றி மக்களின் நல்லபிமானம் பெற்றவராவார்.

தமிழர் ஒருவர் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பதவியேற்றுள்ளமை குறித்து மாவட்டத்தின் பல்வேறு தமிழ், முஸ்லிம் அமைப்புகளும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதுடன், வரவேற்பும் தெரிவித்துள்ளன.

இவரது பதவியேற்பு குறித்து அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் விடுத்துள்ள அறிக்கையில்:

இவர் அம்பாறை மாவட்ட செயலகத்திலிருந்து அனுப்பப்படும் சுற்றறிக்கைகளை தமிழ்மொழியில் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ச-30)

## திருமலை வளாகம் ராஜரட்டவுடன் இணைக்கப்படுவதை ஏற்க முடியாது

### சிவில் சமூக அமைப்பின் தலைவர் தெரிவிப்பு



மட்டக்களப்பு,ஜூலை 16

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் ராஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.மாமங்கராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:


கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் ராஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படப் போவதாக சில தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

அவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் ராஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுவதை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் ராஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படக் கூடாது என்பதை ஜனாதிபதி, உயர்கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளோம்.

கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தியில் மட்டக்களப்பு சிவில் சமூகம் அக்கறையுடன் இருக்கின்றது. சிவில் சமூகத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் அதன் முன்னேற்றத்துக்கும் எப்போதும் உண்டு. -என்றார். (ச)

## விபத்தை குறைக்க வேலைத்திட்டம்



மட்டக்களப்பு,ஜூலை 16

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் அதிகரித்து வரும் வீதிவிபத்துகளை கட்டுப் படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், சிசிலியா பெண்கள் பாடசாலை மாணவர்களுக்கான விளக்கமூட்டும் செயலமர்வு திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

தலைமையக பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பொறுப்பதிகாரி எம்.ஹிதாயதுல்லாஹ் தலை மையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் திரையில் விளக்கப்படங்களுடன் விளக்கமளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துகளை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளனர் என்று தலைமையக பொலிஸ் நிலைய பரிசோதகர் கிங்ஸ்லி குணரட்ன தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு நகர பாடசாலை மாணவர்களிடையே போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விளக்கமூட்டும் செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வடக்குத் தேர்தல் சொந்த முடிவே

## வெளிநாடுகளின் அழுத்தத்தினால் அல்ல என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை 16
வெளிநாட்டு அழுத்தங்களினால் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தலை நடத்தவில்லை. எனது சொந்த முடிவிலேயே நடத்துகிறேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை நடத்துவதற்கு இதுவே சரியான நேரம் என்று அரசு உணர்ந்து கொண்டதால்தான், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.



இது இலங்கையின் ஜனநாயக நடைமுறைகளின் ஒரு பகுதி.

அந்த வழியிலேயே வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு இலங்கை அரசு ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கு மக்களின் உடைந்து போன இதயங்களை சீர் செய்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் அரசு செய்து வருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் குறுகிய காலத்தில் மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

ஆனால் வெளிநாடுகளில் உள்ள சில இலங்கையர்கள் நாட்டுக்கு எதிராக பேசி வருகின்றனர்.

> வெளிநாடுகளில் உள்ள சில இலங்கையர்கள் நாட்டுக்கு எதிராக பேசி வருகின்றனர்.

அவர்கள் நாட்டைப் பிளவுபடுத்த ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது.-என்றார். (ச)

# பணவீக்கம் உயர்வு ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 16
நாட்டில் பண வீக்கம் உயர்வடைந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் தகவல்களின் அடிப்படையில் உள்நாட்டுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

தனி நபர் வருமானத்தை 3000 டொலராக உயர்த்துவதாக அரசு அறிவித்திருந்தது. எனினும், மக்களின் வீட்டுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்களின் பொருள்கள் சேவைகள் நுகர்வும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று அவர் கூறினார்.

வரிச் சலுகையுடன் கசினோ



> சூதாட்ட மையங்கள் ஆரம்பிக்கப்பட்டால் 900 கோடி ரூபா வருடாந்தம் நட்டம் ஏற்படும்.

சூதாட்ட மையங்கள் ஆரம்பிக்கப்பட்டால் 900 கோடி ரூபா வருடாந்தம் நட்டம் ஏற்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## பொதுநலவாய உச்சி மாநாட்டில் 53 நாடுகள்

கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் 53 நாடுகள் பங்கேற்கின்றன என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் பொதுநலவாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 54 நாடுகளுள் 53 நாடுகள் பங்கேற்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## 73 டிப்போ பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை

கொழும்பு,ஜூலை 16
நாடெங்கிலும் உள்ள சுமார் 73 அரச பஸ் டிப்போக்களின் பணியாளர்களின் கடந்த ஜூன் மாதச் சம்பளம் இதுவரையில் வழங்கப்படவில்லை என்று அகில இலங்கை போக்குவரத்து சேவையாளர் சங்கத்தின் தலைவர் சேபால் லியனகே தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக பெரும்பாலான அரச பஸ் ஊழியர்கள் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர் என்று அவர் கூறினார்.



பஸ் டிப்போ ஊழியர்களுக்கான சம்பளத் தொகையின் ஒரு பகுதி அரசினால் இன்னமும் தமக்கு வழங்கப்படவில்லை என்று இலங்கை போக்குவரத்து சபையின் உப தலைவர் எல்.எச். விமலரத்ன தெரிவித்தார். (ச)

## பிளாஸ்ரிக் வாக்குப்பெட்டிகள் மாகாணசபைத் தேர்தலில் அறிமுகம்


கொழும்பு,ஜூலை 16
இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் புதிய வாக்குப் பெட்டிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இலங்கையில் இதுவரை மரத்தினால் செய்யப்பட்ட வாக்குப் பெட்டிகளே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.


ஆனால், பல்வேறு நாடுகளில் தற்போது பிளாஸ்ரிக்கினால் தயாரிக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு, மத்திய, வடமேல் மாகாண சபைத் தேர்தலில் தேர்தல் திணைக்களம் பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகளை பயன்படுத்தவுள்ளது என்று தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வாக்குப்பெட்டிகளைத் தயாரிப்பதற்



கான மகோகனி மரம் நியாயமான விலைக்கு, போதியளவில் பெறமுடியாதுள்ளதுடன் தயாரிப்புச் செலவும் அதிகம் என்பதால் மரத்தினாலான வாக்குப்பெட்டிகளைக் கைவிட்டு பிளாஸ்ரிக் பெட்டிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன என்று அவர் மேலும் கூறினார். (ச)




கொழும்பு - ஹற்றன் பிரதான வீதியில் நிலம் கீழிறங்கியுள்ளது. வட்டவளைக்கும் குயில்வத்தைக்கும் இடையில் பாதையின் ஓர் பகுதி கீழ் இறங்கியுள்ளது. சுமார் 5 மீற்றர் தூரமான வீதி கீழிறங்கியுள்ளதால் இரு வழி பாதையான இந்தப் பகுதியில் ஒரு வழியில் மாத்திரமே வாகனங்கள் பயணிக்கக் கூடியதாக உள்ளது.

## வரலாறு பாடத்துக்கு புதிய பாடத்திட்டம்

கொழும்பு,ஜூலை 16
வரலாறு பாடம் தொடர்பில் புதிய பாடத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த பாடத்திட்டம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் தயாரிக்கப்படவுள்ளது என்று நிறுவனத்தின் கல்விப் பணிப்பாளர் பேராசிரியர் அபேரத்ன தெரிவித்தார்.

பாடத்தைக் கற்பிக்கும்



போது முன்னர் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தப் புதிய பாடத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இலங்கையின் நபர் ஒருவரை உருவாக்கும் வகையிலான சூழல் மற்றும் வரலாறுகள் உள்ளடங்கிய வகையில் புதிய பாடத்திட்டம் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டு முதல் புதிய பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தொலைபேசி மிரட்டல் வந்தால் முறையிடவும்

## பொலிஸார் அறிவிப்பு



கொழும்பு,ஜூலை 16
தொலைபேசி மூலம் மிரட்டல் வந்தால் அதுகுறித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொலைபேசி மூலமாக பலரை அச்சுறுத்தி பணம் பறிப்பது தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், பொலிஸ் தலைமையகம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் உட்பட பல பேரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு, பணம் கேட்டு அச்சுறுத்தும் நபர்கள் பற்றி உடனடியாக அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் அல்லது பொலிஸ் முறைப்பாட்டு பிரிவின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யவும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆறு ஆயிரம் மாத்திரைகளுடன் பாக். நபர் கைது

கொழும்பு,ஜூலை 16
6 ஆயிரம் மாத்திரைகளுடன் பாகிஸ்தான் நபரொருவர் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்திரைகளைப் பயணப் பொதியில் மறைத்து வைத்து கொண்டுவந்தபோதே சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் மாத்திரைகளை மீட்டுள்ளதுடன் அவரையும் கைது செய்துள்ளனர்.

மூன்று லட்சம் ரூபா பெறுமதியான இந்த மாத்திரைகள் மன நோயாளிகள் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகின்ற மாத்திரைகளாகும். எனினும், அந்த மாத்திரைகளை மாணவர்கள் பயன்படுத்துவதாக வதந்தி நிலவுகிறது. ஓமான் ஏர்வேஸ் விமானத்தில் மஸ்கட்டிலிருந்து வந்தபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நான் முன்னாலே போறேன் நீ பின்னாலே வாவேன்...

பாகிஸ்தானுடன் அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதில் இலங்கை மிகுந்த தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. இந்திய ஊடகங்கள் அது குறித்த விவரங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வெளிப்படுத்தியுள்ளன.

இதேவேளை, இலங்கையுடன் அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு இந்தியா கால அட்டவணை கேட்டிருந்த போதிலும் இலங்கை அதில் அக்கறை கொள்ளவில்லை.

எனினும் இலங்கை அரசாங்கமோ அதனைக் கைவிடும் போக்கில், மௌனம் சாதித்து வருவதாக, மிக்க அசமந்தத்துடன் இருந்ததாக இப்போதைய இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா இரண்டாவது தடவையாகவும் கொண்டு வந்த பிரேரணையை இந்தியா ஆதரித்தமைக்கு வஞ்சம் தீர்க்கும் வகையிலேயே, இலங்கை அரசு அணு ஆயுத ஒப்பந்தத்தை பாகிஸ்தானுடன் செய்து கொள்வதில் நாட்டம் கொண்டுள்ளது என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்த இரண்டு ஆசிய நாடுகள் இந்தியாவும் தென்கொரியாவும் மட்டுமே என்பதால்–

இலங்கை அரசு அதற்குப் பழிவாங்கும் செயலாகவே இந்தியாவுடன் அணு ஆயுத ஒப்பந்தம் செய்வதிலிருந்து விலகி வருவதாக ராஜீக வட்டாரங்களில் கருத்து நிலவுகின்றது.

கடந்த பதினொரு ஆண்டுகாலமாக இலங்கை தொடர்பாக பாகிஸ்தான் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு இசைவானவையாக இருக்க முடியாது. இவற்றில் ஆகப் பிந்தியதுதான், இலங்கையுடன் குடிசார் அணுசக்தி ஒப்பந்தம் செய்வதற்கு தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் நகர்வுகள்.

ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் இலங்கை – இந்திய உறவுகளில் நம்பகத்தன்மை குறைந்துவருகிறது. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா தற்பொழுது கொண்டுள்ள நிலைப்பாடு மேலும் நம்பிக்கையீனம் அதிகரிக்க வழிவகுத்துள்ளது. 13ஆவது திருத்தம் குறித்து ஏதாவது நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் இந்தியாவும் இலங்கையும் பேசித் தீர்மானிக்கவேண்டும் என்று இந்தியா அதிரடியாகத் தெரிவித்துவிட்டது.

அதனால் உத்தேச அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தைக்கூட நாடாளுமன்றத்தில் நிறைவேற்றமுடியாத இக்கட்டான நிலைமையை இலங்கைக்கு இந்தியா ஏற்படுத்திவிட்டுள்ளது. இத்தகைய நிலையிலேயே இலங்கை – பாகிஸ்தான் குடிசார் அணுசக்தி ஒப்பந்தம் குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

அணுசக்தித் திட்டங்கள் தொடர்பான விடயங்களில் சர்வதேசத்தின் நம்பிக்கையை முழுமையாகப் பெறத் தவறிய பாகிஸ்தானுடன், இலங்கை ஒப்பந்தம்செய்ய முற்படுவது இந்திய – இலங்கை உறவில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான இந்து சமுத்திர ஆதிக்கப் போட்டியில் இலங்கை சிக்கிவிடும் வாய்ப்பும் வருந்தி அழைக்கப்படும் ஒன்றாகிவிடும்.

தெற்காசியாவில் இலங்கையின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாக பாகிஸ்தான் திகழ்கிறது. போர்க் காலத்தில் இலங்கை கோரிய ஆயுதங்களை வழங்க இந்தியா மறுத்தமை, இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம்செய்ய இந்தியா தயங்கியமை ஆகியவை பாகிஸ்தானுக்கு சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவித்தன.

யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் மீளக் கைப்பற்ற முயன்றுகொண்டிருந்த வேளை, 2000ஆம் ஆண்டளவில் அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த பேர்வெஸ் முஷாரப் மிகவும் முக்கியமான ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கினார் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

2008இல் சரத் பொன்சேகா இலங்கையின் இராணுவத் தளபதியாக இருந்த வேளை பாகிஸ்தான் இராணுவத் தளபதியுடன் பேச்சு நடத்தி 10 கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களைப் பெறமுடிந்தது. 2010இல் ஜனாதிபதியாக இருந்த அஷிப் அலி சர்தாரி இலங்கை வந்தபோது இலங்கையின் பொலிஸ், உளவுத்துறைக்குப் பயிற்சியளிக்க இணக்கம் காணப்பட்டது.

இவை இலங்கை – பாகிஸ்தான் உறவில் படிப்படியாக ஏற்பட்ட முன்னேற்றங்கள். இவை குடிசார் அணுசக்தி ஒப்பந்தம் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளன. இது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவாகும் என்று கருதத் தக்கதாகும்.

மொத்தத்தில், – நான் முன்னாலே போறேன் நீ பின்னாலே வாவேன் – என்ற நிலைக்கு ஒப்பானது.

# இராணுவத்தின் நில அபகரிப்பும் தமிழ் மக்களின் சொத்துரிமையும்

சொத்து உரிமை என்பது பலவீனமாகவும், வினைத்திறனற்றதாகவும் இருப்பதால் போருக்குப் பின்னான சூழலில் பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. இரத்தம் சிந்தப்பட்ட நீண்ட காலப் போரானது முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் பொருளாதாரத்துக்கு மீளவும் புத்துணர்வு வழங்குவதில் மிகப் பாதுகாப்பான சொத்து உரிமைகள் என்பது தேவைப்பாடானதாகும். இவ்வாறான சூழலில் வாழும் பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்களுக்கு குறிப்பாக விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரமானது சொத்துப் பாதுகாத்தல் உரிமையிலும், தமது நிலங்களைப் பயன்படுத்தும் உரிமையிலுமே தங்கியுள்ளது. இதற்கும் மேலாக, நம்பகமான சொத்து உரிமை என்பது போருக்குப் பின்னான சூழலில் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வதற்கும், நிதிசார் சவால்களைச் சந்திப்பதற்கும் உந்துசக்தியாக உள்ளது.

இந்நிலையில், போரின் போதான இடப்பெயர்வுகள், மக்கள் மீளக் குடியேற்றப்படுதல், அரசாலும், அரச சார்பற்ற பங்குதாரர்களாலும் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் கையகப்படுத்துதல், மக்கள் தமது சொத்துக்களை இழத்தல் அல்லது காலவதியாதல் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் போன்ற ஏனைய சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் தடைகள் மற்றும் அவற்றைத் தொலைத்தல் போன்றவற்றால் நிலச் சொந்தக்காரர்கள் தமது நிலங்களைப் பயன்படுத்துவதில் தடைகள் உருவாவது கெட்டவாய்ப்பாகும்.

26 ஆண்டுகளாகத் தொடரப்பட்டு 2009இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட உள்நாட்டுப் போரின் போது நிலம் என்பது மிகப் பிரதான விவகாரமாக இருந்துள்ளது. கடந்த முப்பதாண்டுகளாக, இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட இயற்கை மற்றும் செயற்கை அழிவுகளால் கணிசமான அளவு மக்கள் உயிரிழக்க நேர்ந்ததுடன் ஏராளமான மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டனர்.

இலங்கையில் மீள் இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கு நில உரிமையை உறுதிப்படுத்துதல் மிக அவசியமான நகர்வாகும் என இந்நாட்டு அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவால் 2011இல் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையிலும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாது நிலுவையில் உள்ளது.

போரின் பின்னான சூழலில் மீள்குடியேற்றத்தை மேற்கொள்வதென்பது தமது பலத்தை உறுதிப்படுத்துகின்ற காரணிகளில் ஒன்று என இலங்கை அரசு அறிவித்த போதிலும், நில அபகரிப்பு நடவடிக்கையின் கீழ் காணிகளை இழந்த நில உரிமையாளர்களால் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் இன்னமும் தீர்வு வழங்கப்படாது உள்ளன. நில உரிமையாளர்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படாவிட்டால், இலங்கை அரசின் இவ்வாறான செயற்பாடுகளின் விளைவுகளால் நாட்டில் மீண்டும் உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்படுவது தடுக்கப்பட முடியாததாக இருக்கும்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியதில் இருந்து, இலங்கை இராணுவத்தினர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நோக்கங்களுக்காக மக்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கையகப்படுத்தி வருகின்றனர். போரின்போது இழக்கப்பட்ட நிலங்கள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் என ஜனவரி 2013இல் வெளியிடப்பட்ட அரசின் சுற்றறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. உரிமை கோரப்படாத காணிகள் கையகப்படுத்தப்படுவதாக சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையின் உள்நாட்டுப் போரில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு வாழ் மக்கள் அரசின் இவ்வாறான நிலச் சட்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் முன் ஒரு காலத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்க மீன்பிடித் துறைமுகமாக விளங்கிய மயிலிட்டி துறைமுகம் தற்போது உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் 15 சதவீத நிலப்பரப்பை உள்ளடக்கிய இந்தப் பகுதியில் 24 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தினரின் மிக முக்கிய இராணுவத் தளங்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டன. இதனால் மயிலிட்டித் துறைமுகத்தில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழ் மீனவர்கள் தற்போது பருத்தித்துறை மற்றும் வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் மீளக்குடியேறுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

சிவப்பு வெங்காயம், மிளகாய், புகையிலை, வாழை மற்றும் தக்காளி போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொண்ட வலிகாமம் வடக்கு வாழ் விவசாயிகளின் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டதால் இவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தாம் போரின் பின்னர் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறலாம் என்ற நம்பிக்கையில் இந்த மக்கள் காத்திருந்த போதும், உயர் பாதுகாப்பு வலயம் இன்னமும் அகற்றப்படாது இராணுவமயமாக்கல் மேலும் அதிகரிப்பதானது இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேலும் மேலும் பாதித்து வருகிறது. தாம் தமது நிலங்களை விட்டு இடம்பெயர்த்தப்பட்டதால் தமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக தெல்லிப்பளையைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகின்றனர். இவர்கள் தமது நெருங்கிய உறவினர்களின் மிகச் சிறிய தோட்ட நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். தாம் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்படாததால் தொடர்ந்தும் தமது நிலங்களையும் சொத்துக்களையும் இழக்கும் அபாயத்தில் உள்ளதாகவும் இந்த விவசாயிகள் கூறுகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்படாததாலும், அரசால் நட்டஈடுகள் எதுவும் வழங்கப்படாததாலும் இவர்களது வாழ்வு மேலும் மோசமடைந்துள்ளது.

இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் இலங்கை இராணுவத்தினருக்கும் இலங்கைக் கடற்படையினருக்கும் பொருளாதார வலயம் ஒன்றை உருவாக்கி அதில் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம், தொழிற்சாலைகள் மற்றும் விடுதிகள் போன்றவற்றை உருவாக்குவதற்கான திட்டத்தை அரசு கொண்டுள்ளது. இதற்கப்பால், இங்கு உள்ளூர் தொழிலாளிகளைப் பயன்படுத்தி விவசாயம் மற்றும் மீன்பிடியை மேற்கொள்ளாது இதற்காக அரச பணியாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

இலங்கை அரசின் இவ்வாறான நில அபகரிப்பு கொள்கையானது, சுற்றுலாத்துறை, முதலீடு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கானது எனப் பெரிதாகப் பேசப்பட்டாலும் கூட. இதனால் போருக்குப் பின்னான மீள்கட்டுமானப் பணிகள் தாமதப்படுத்தப்படுவதுடன், மக்களின் வறுமை நிலையைக் குறைப்பதிலும் தாமதம் ஏற்படுகின்றது என்பதே உண்மையாகும்.

இலங்கை இராணுவம் இந்த நிலங்களிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக் கொள்வதற்காக வளங்கள் மற்றும் தொழினுட்பத்தைப் பயன்படுத்தினாலும் கூட, இவர்களின் இவ்வாறான செயல்களினால் போருக்குப் பின்னான மக்களின் மீள்கட்டமைப்பு பணிகள் முடக்கப்படுகின்றன என்பதே உண்மையாகும். போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரமானது ஏற்கனவே சீரழிந்துள்ள நிலையில், தனியாரின் காணிகளும் பொதுக் காணிகளும் கையகப்படுத்தப்படுவதானது மக்களை மேலும் மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

இலங்கையில் அபிவிருத்தி மற்றும் சமாதானம் என்பன நிலையாகக் கட்டியெழுப்பப்படுவதற்கு, இங்கு சொத்து உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், இவ்வாறான நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நாட்டை முன்னேற்றுவதற்கும் உள்ளூர் மக்களுடன் கலந்தாலோசனைகள் நடத்தப்பட வேண்டும்.

*(நன்றி -புதினப்பலகை)*



பன்ரெண்டு வயசில இருந்து கடற்தொழில் செய்யத் தொடங்கினனான். அது இன்டைக்கு வரைக்கும் நிக்கேல்ல. இப்ப எனக்கு ஐம்பத்தாறு வயசு. கடலோடி, தொழில் செய்து நான் இன்னும் ஓயேல'' என்கிறார் பாக்கியசூர்யா என்ற தேவபுரத்தின் கடற்தொழிலாளி. குரலிலேயே அனுபவம் இழையோடியிருந்தது.


''கொழும்பில இருந்து இறக்குமதி செய்யிற அலங்காரப் பொருள்களை சனங்கள் வாங்கேக்க எங்கட உற்பத்திகள் கொழும்பு உற்பத்திப் பொருள்களோட போட்டி போடுறதென்பது சாத்தியமில்லாத விடயம்'' என மனம் திறக்கிறார் சுயகைத் தொழில் மூலம் முன்னேறி வரும் பிரியா.

எண்பத்து நான்கு குடும்பங்களின் குரல்கள் சேர்ந்து ஒலித்த அந்த இடம் தேவபுரம் என்கின்ற அன்றைய வசந்தபுரம்.

யாழ் நகரில் இருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிராமம். கொழும்புத்துறையை அயற்கிராமமாக கொண்டு கடற்கரையோரம் அமைந்துள்ள கிராமம் இது. சிறிய குடில்களுடன் வரவேற்கும் இக்கிராமம் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களுள் ஒன்று. 1995 இல் உள்நாட்டு போர் காரணமாக இந்தக் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் சொந்த மண்ணை விட்டு வெளியேறி நாட்டின் வேறு பிரதேசங்களிலும் இந்தியாவிலும் குடியேறினர். பின்னர் 2010 ஆம் ஆண்டு ஆவணி மாதம் மீண்டும் சொந்த மண்ணுக்கு வந்த தேவபுரம் மக்கள் கடந்த மூன்று வருட காலமாக கிடைக்கும் சொற்ப வருமானத்தில் நிம்மதியாக வாழ்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் வசந்தபுரம் என்றொரு குடியேற்றக் கிராமம் இருப்பதை இதுவரை அறியாத பலர் உள்ள நிலையில் அந்த வசந்தபுரம், பெயர் மாற்றம் பெற்று தேவபுரம் ஆன அதிசயமும் நிகழ்ந்தது. கடற்தொழிலையும் தும்பு மற்றும் சிரட்டைத் தொழிலையும் பிரதான தொழிலாகவும் வேறு சிறு சிறு தொழில்களையும் மேற்கொள்ளும் எண்பத்து நான்கு குடும்பங்களுடன் கடற்கரையில் இதமான சூழலில் அமைதியாக தெரிந்தது தேவபுரம் எனும் கடற்கரையை அண்டிய கிராமம்.

''கடல்தொழிலுக்கு உதவிகள் எண்டு எதுவும் இல்லை. வலையும் எங்கட முதல்தான். படகு, என்ஜின் வாடைக்குத்தான் எடுக்கிறனாங்கள்'' என்று கூறும் அந்தோனிப்பிள்ளை இருபத்து ஐந்து வருடகாலமாக கடற்தொழிலில் ஈடுபட்டுவருகிறார். தொழிலுக்குப் போனாத்தான் வருமானம் என்ற நிலையில் கூட ''வறுமையிலும் செம்மை'' கண்டு வாழ்ந்து வரும் அந்த மக்கள் முகத்தில் நிம்மதி இழையோடி இருந்தது. நகர வாழ்வில் கிடைக்காத பல அனுபவங்கள் கிராம வாழ்வில் கிடைக்கும் என்பதனை தேவபுரத்தில் தரித்து நின்ற அந்தச் சில நிமிடங்கள் உணர்த்தின. அதில் அந்த மக்களது போலியற்ற புன்னகையும் ஒன்று. ஒருவேளை இது தேவர்புரமாக இருக்குமோ என்னவோ? நகர வாழ்க்கையில் பயனற்றது என நாம் தூக்கி எறியும் வெற்றுச் சிரட்டைகளைப் பயன்படுத்தி பல விதமான அலங்காரப் பொருள்களை உருவாக்கி அவற்றை விற்று, அதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களும் அங்கு இருக்கத்தான் செய்கிறார்கள்.

''நான் சிரட்டையில அழகுசாதனப் பொருள்கள் செய்யிறனான். அதோட விளக்குமாறு, தும்புத்தடி, கால்மிதி, கயிறு எல்லாம் செய்து கடைகளுக்கு குடுக்கிறனான். கிட்டத்தட்ட ஒரு வருசத்துக்கு மேல



# நம்பிக்கையும் விடாமுயற்சியும் தொழில் வெற்றியின் இரகசியம்

தட்சா. ஜோ


ஆகிறது, நான் இந்தத் தொழில் செய்யத் தொடங்கி'' என்று தமது கைவினைத் தொழில் பற்றி விவரிக்கும் பிரியாவின் முகத்தில் ஊக்கமும் முயற்சியும் தெள்ளெனத் தெரிந்தது.

கைத்தொழில் அதிகார சபையினர் தும்பு வேலைகளுக்கான இயந்திரத்தை வழங்கியுள்ளனர். தும்புத்தடி, விளக்குமாறு போன்றவற்றிற்குத் தேவையான தடி, தகரம், தும்பு போன்றவற்றை வாங்க தமது சொந்தப் பணத்தை செலவு செய்து உற்சாகத்துடனும் தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டு முன்னேற்றகரமான வாழ்க்கையை ஈட்டியுள்ள அந்தப் புதுமைப் பெண்களைக் காண புரட்சிக் கவிஞன் பாரதியின் புதுமைப் பெண் கவிதைகள்தான் ஞாபகத்தில் வந்தன.

''கொழும்பு இறக்குமதிகளை விட எங்கட பொருள்களுக்கு கேள்வி அதிகம். ஆனால் எங்களுக்கு சந்தைப்படுத்தல் வசதி இல்லை. அதால எங்கட பொருள்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது'' என்று கூறும் வினிதா தன் தாயாருடன் சேர்ந்து தும்பு மற்றும் சிரட்டைகளைப் பயன்படுத்தி அலங்காரப் பொருள்களைத் தயாரித்து விற்கிறார். தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் உத்திமுறைகளில் ஒன்றாக கண்காட்சிகளில் தமது கைவினைப் பொருள்களை காட்சிப்படுத்துவதை அண்மைக் காலமாக வழக்கப்படுத்திக் கொண்டுள்ளார்களாம் இந்த யுவதிகள்.

''என்ர கணவர் கூலி வேலை செய்யிறவர். இரண்டு வயசில மகள் இருக்கிறா. நான் தும்பு வேலை செய்யிறனான். வருமானத்துக்கு பிரச்சினை இல்லை. என்ர குடும்பத்தில முதலில இந்தத் துறைக்கு வந்தது நான்தான்'' என்று கூறிக் கொண்டிருந்த பரியா ''கொழும்பு உற்பத்திப் பொருள்கள் இறக்குமதி செய்யிற இடத்தைக் கண்டுபிடிச்சு நாங்கள் அங்க சந்தைப்படுத்தினா நிச்சயமாக இந்தத்துறையில் வெற்றி காணலாம்'' என்றபோது வியாபார நுட்பங்களை தெரிந்து வைத்துள்ளாரே என்ற வியப்பும் ஏற்பட்டது.

''நாங்க வணிக முகாமைத்துவம் படிச்சனாங்க. பிரதேச செயலகத்தினாலயும், ஹரித்தாஸ் கியுடெக் நிறுவனத்தாலயும் இந்த வாய்ப்பு



எமக்குக் கிடைச்சது என பிரியா பெருமையாகவும் நன்றியுணர்வோடும் தெரிவித்தார்.

சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை உரிய தரப்பினரிடம் எடுத்துக் கூறியதன் விளைவாக ''வர்த்தக கைத்தொழிற் சங்கம்'' சந்தைப்படுத்தலை தாம் ஏற்படுத்தி தந்து உதவுவதாக உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.


''தும்பு, சிரட்டைக் கைத்தொழில் செய்யிறது எல்லாம் பெண்கள் தான். அதால ஆண்கள் போல பொருள்களை கொண்டு சென்று விற்கமுடியாது. ஆனாலும் எங்களால முடிந்தளவு நாங்கள் சந்தைப்படுத்தி விற்பனை செய்யிறம்'' என்கிறார் வினிதா.

வினிதாவின் குடும்பம் பெண் தலைமைத்துவத்தைக் கொண்டது. மன்னாரில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் தந்தையை இழந்த வினிதாவும் தாய் மங்களாதேவியும் வாழும் வாழ்க்கை பெண்களுக்கு எடுத்துக்காட்டாக அமையத்தக்கது. வினிதாவின் ஒவ்வொரு வார்த்தையிலும் ''எப்படியும் வாழலாம் என்பதல்ல வாழ்க்கை. இப்படித்தான் வாழவேண்டும்'' என்ற குறிக்கோளுடன் வாழ முயலும் தன்மை வெளிப்பட்டது.

''நாங்கள் தொழில் பழக வரேக்க ஆறு பேர் தான் வந்தனாங்க. ஆனா இப்ப பல பெண்கள் இந்தத் துறையை பழக விருப்பமா இருப்பது அவயின்ர ஆர்வத்தை வெளிக்காட்டுது'' என்று கூறும் பிரியா தன் சகோதரிகளையும் இதே துறைக்குள் கொண்டு வந்துள்ளார்.

தும்புத்தடிக்கான தும்புகளை பளையில் இருந்தே கொள்வனவு செய்கிறார்கள். ''தும்புத்தடிக்கு மெஸின் கட் தும்புதான் தேவை. கடல் இருக்கு இங்க. ஆனா கடல்ல ஊறவிட்டு எடுக்கிற தும்பு தும்புத்தடிக்கு ஏற்றதில்ல'' என்று கூறும் இவர்கள் அனுபவ ரீதியாகவே இவற்றைக் கற்றுணர்ந்துள்ளனர்.

இன்று கிராமங்களின் உண்மையான இருப்பையும் அமைதிச் சூழலையும் மட்டுமல்லாது அதன் பழைமையையும் இன்னமும் கட்டிக்காத்துக் கொண்டிருப்பவர்கள் கிராமத்துப் பெரியவர்கள்தான்! இந்த மூத்த தலைமுறை அற்றுப் போனால் நிஜமான கிராமத்து வாசனையும், இன்றைய நவீன நாகரிகப் புரட்சியின் முன்னால் மறைந்து போகும். அதற்குள் அந்தத் தூய கிராமத்து இருப்பையும் பண்பாட்டு விழுமியங்களையும் அடுத்த தலைமுறையினர் மத்தியில் இறுக்கமாகவும் கட்டுக்கோப்பாகவும் நிலைபெற வைப்பதில் பல்துறை சார் ஊடகங்களுக்கும் கணிசமான பொறுப்பு உண்டு என்பது நிச்சயமானதொன்றாகும்.



உதயன்
16/07/2013



# புதுப் பொலிவூட்டப்பட்ட போல் றூமை திறந்துள்ள பைகஸஸ் ரீஃப் ஹோட்டல்

பைகஸஸ் ரீஃப் ஹோட்டல் (Pegasus Reef Hotel) அண்மையில் தனது புதிதாக புதுப்பிக்கப்பட்ட போல் றூமை (Ballroom) திறந்து வைத்துள்ளது. இதன்மூலம் எப்போதும் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற தனது வாடிக்கையாளர் தளத்திற்கு வழங்கும் உற்பத்திகள், சேவைகளை மேலும் பலப்படுத்தியுள்ளது.

ரூபா 60 மில்லியன் பெறுமதியான இந்தப் புதுப்பித்தல் செயற்றிட்டத்தை நிறைவு செய்ய கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் எடுத்துள்ளன. கண்ணைக் கவரும் புதிய துணி போன்ற சுவர் ஒப்பனைத் தாள், சிவப்பு, மஞ்சள் மற்றும் பழுப்பு வர்ணம் கலந்த புதிய தரைவிரிப்பு, மிக முன்னேற்றகரமான ஒளியமைப்பு முறைமை, விஷேடமாக வடிவமைக்கப்பட்ட நவீன சரவிளக்குப் பொருத்துதல் ஆகியவற்றின் மூலம் மண்டபத்தின் அழகுணர்ச்சியை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளும் இப் புதுப்பித்தல் பணிகளுள் உள்ளடங்குகின்றன. இங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஒலி-உட்புகாத பிரிக்கும் கட்டமைப்பானது 'போல் றூமை' இரு பகுதிகளாக பிரித்துப் பயன் படுத்துவதற்கு வசதி அளிப்பதன் ஊடாக ஒட்டுமொத்த உற்பத்தித் திறனையும் மேம்படுத்துகின்றது.

அனுபவமுள்ள ஹோட்டல் துறை நிபுணரும் பைகஸஸ் ரீஃப் ஹோட்டல் நிறுவனத்தின் பணிப்பாளருமான பெடி விதான கூறுகையில், 'பேராவலுள்ள இந்த புதுப்பிக்கும் செயற்றிட்டமானது, ஹோட்டல் முன்னேறிச் செல்வதற்கு வழிவகுக்கின்றது. கொழும்பு வடக்கைச் சேர்ந்த எமது பெருமளவான வாடிக்கையாளர்கள் மத்தியில் அது பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது மாத்திரமன்றி, அதற்கு அருகிலமைந்துள்ள இடங்களுக்கும் இவ்வரவேற்பு பரவிய வண்ண முள்ளது, 1200 சதுர மீற்றர் பரப்பளவான போல் றூமில் 800 பேரை மதுபான விருந்துபசாரத்து க்காகவும், சுமார் 600 பேரை திரு மண நிகழ் வுக்காகவும் அமர வைக்க முடியும். இதனை ஒரு திரையரங்கு வடிவிலும், வகுப்பறை வடிவிலும், பணிப்பாளர்கள் அறை வடிவிலும் கூட தேவையான போது பயன்படுத்த முடியும்.

ஒலி-உட் புகாத பிரிக்கும் தடுப்புச் சுவர் கட்டமைப்பானது புதுப்பிக்கப்பட்ட போல் றூமை 'ரன்தம்பரா' மற்றும் 'சோபரா' என்ற பெயர்களைக் கொண்ட இரு தனித் தனியான அறைகளாக பிரித்து பயன்படுத்துவதற்கு வசதியளிக்கின்றது. இதன் வாயிலாக ஒட்டுமொத்த மான உற்பத்தியாற்றல் அதிகரிக்கச் செய்யப்படுகின்றது' என்றார்.

## தங்க அனுசரணையாளராக ஜனசக்தி




இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி, இலங்கை வர்த்தக சபை (FCCISL) நடத்தும் Sri Lankan Entrepreneur of the Year 2013 நிகழ்வின் தங்க அனுசரணையாளராக இணைந்துள்ளது. இவ் விருது வழங்கும் நிகழ்வில் உள்நாட்டு வியாபார பிரமுகர்களிடையே காணப்படும் முயற்சியாண்மை மனப்பாங்கு அடையாளப்படுத்தப்படுகிறது. எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இவ் விருதுகள் வழங்கும் நிகழ்வின் தொனிப் பொருளாக "உங்கள் விடாமுயற்சியே தேசத்தின் இயக்கம் எனும் வாசகம் அமைந்துள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அறிமுக செய்தியாளர் கூட்டத்தில் பங்கேற்ற ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரகாஷ் ஷாஃப்ட்டர் FCCISL இற்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார். மேலும் அவர் இலங்கையின் வியாபார சமூகத்தின் மத்தியில் தொழில் முயற்சியாண்மை உணர்வினை அபிவிருத்தி மற்றும் மெருகேற்றும் FCCISL இன் செயற்திறன் மிக்க நடவடிக்கைகளுக்கு தங்க அனுசரணையாளராக ஜனசக்தி தனது முழு ஆதரவினையும் வழங்கவுள்ளது என்றார்.

மேலும் அவர் தொழில் முயற்சியாண்மை ஜனசக்தியின் இதயத்தில் உள்ளது. எமது நிறுவனத்தை நிறுவிய சி.டி.ஏ.ஷாஃப்ட்டர் ஒரு சிறந்த தொழில் முயற்சியாளர் ஆவார். அவர் ஜனசக்தி வர்த்தக நாமத்தை கடந்த 18 ஆண்டுகளாக தமது பார்வை, அர்ப்பணிப்பு, புதுமை மற்றும் வலிமை மூலம் கட்டியெழுப்பியுள்ளார். எனவே தான், பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் ரீதியில், தமக்கேயுரிய வர்த்தகநாமத்தை கட்டியெழுப்பிக் கொள்வதற்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செலுத்தவும் தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவினை வழங்கி வருகின்றோம் என்றார்.

Sri Lankan Entrepreneur of the Year 2013 நிகழ்வானது நாடுமுழுவதும் உள்ள 58 வர்த்தக சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் வட, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பிரதேசங் களிலும் வியாபார சமூகத்தினர் அதியுயர் தேசிய கௌரவமாக கருதும் தொழில் முயற்சியாண் மைக்கு விருது வழங்கும் இலங்கையின் ஒரே யொரு நிகழ்ச்சியாக இது அமைந்துள்ளது என்றார்.

# ஹட்ச் இணைப்பில் Nimbuzz App 6 மாத காலப்பகுதிக்கு இலவசம்

பரந்தளவில் உபயோகிக்கப்படும் சமூக செய்திகள் பரிமாறிக்கொள்ளும் அப்ளிகேஷனான Nimbuzz உடன் ஹட்ச் பங்குடைமை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற் கொள்ளப்பட்டுள்ள இந்த உடன்படிக்கையின் மூலம் 6 மாத காலப்பகுதிக்கு இலவசமாக இந்த Nimbuzz அப்ளிகேஷனை ஹட்ச் கையடக்க தொலைபேசியில் உபயோகிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக தனது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த Nimbuzz அப்ளிகேஷனை 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி வரை இலவசமாக உபயோகிப்பதற்கான வாய்ப்பை ஹட்ச் ஏற்படுத்தியுள்ளது. Nimbuzz என்பது ஒரு Chat ரக அப்ளிகேஷன் ஆகும். நண்பர்களுடன் மிகவும் வேகமாக எந்தவொரு yahoo, Gtalk அல்லது Facebook கணக்கின் ஊடாகவும் துரிதமாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்துள்ளது.

இந்த திட்டம் குறித்து ஹட்ச் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருக்குமார் நடராசா கருத்து தெரிவிக்கையில், Nimbuzz உடனான எமது சிறப்பு பங்குடமை உடன்படிக்கையின் மூலம், எமது வாடிக்கையாளர்களுக்கு மேலும் அனுகூலம் சேர்க்கப்பட்டுள்ளது. அண்மைக் காலமாக நாம் மேற்கொண்டு வரும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சிறந்த உயர் நிலைகளில் காணப்படும் அப்ளிகேஷன் வடிவமைப்பாளர்களுடனான பங்குடைமை நடவடிக்கைக்கு அமைவாக இதுவும் அமைந்துள்ளது. இந்த உடன்படிக்கைகள் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் நிலவும் தொடர்பாடல் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு ஹட்ச் நிறுவனத்துக்கு உதவியாக அமைந்துள்ளன. பாவனையாளர்களுக்கு அதிகளவு பெறுமதி சேர்ப்பதில் நிறுவனம் அதிகளவு கவனம் செலுத்தி வருகிறது. இந்த உடன்படிக்கைகளின் மூலம் எமது வர்த்தக நாமத்தின் உறுதி மொழியை நிறைவேற்ற எமக்கு முடிந்துள்ளதாக நாம் கருதுகிறோம். இலங்கையில் Nimbuzz உடன் பங்குடமை அடிப்படையில் சேவைகளை வழங்க நாம் முன்வந்துள்ளமையானது, இலங்கையின் கையடக்க தொலைபேசி தகவல் பரிமாற்றல் சேவைகளில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கும் என நாம் நம்புகிறோம் என்றார்.

Nimbuzz இன் பிரதம நிறைவேற்று அதிகாரி விகாஸ் சக்சீனா கருத்துத் தெரிவிக்கையில், Nimbuzz I சேர்ந்த நாம் இந்த உடன்படிக்கை குறித்து பெரும் மகிழ்ச்சியடைகிறோம். எதிர்கால கையடக்க தொடர்பாடல் வலையமைப்பு என்பது தொலைத்தொடர் பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் ஒன்றிணைவதன் மூலம் சிறப்பாக மேற்கொள்ள முடியும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த உடன்படிக்கையானது இலங்கையில் ஹட்ச் நிறுவனத்தின் பிரசன்னத்தை மேலும் உறுதி செய்ய வழிகோலுவதாக அமையும் என்றார்.

இந்த கையடக்க தொலைபேசி அப்ளிகேஷன் ஆனது, 3ஏ தரம் வாய்ந்த கையடக்க தொலைபேசிகளில் மட்டுமல்லாமல், 2ஏ தரம் வாய்ந்த கையடக்கதொலைபேசிகளிலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். இதன் மூலம் இலங்கையிலுள்ள சகலருக்கும் இந்த அப்ளிகேஷனை பயன்படுத்தி அனுகூலமடையும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தனது 3ஏ வலையமைப்பு சேவைகளை அறிமுகம் செய்திருந்தமையைத் தொடர்ந்து, ஹட்ச் தனது வாடிக்கையாளர்கள் மத்தியில் தொடர்ச்சியான வரவேற்பைப் பெற்று வருவதுடன், உயர் தரம் வாய்ந்த புரோட்பாண்ட் டேடா சேவைகளையும் வழங்கி வருகிறது என்றார். (த)



# முருங்கன் பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவம்

மன்னார், ஜூலை 16

மன்னார் முருங்கன் பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மன்னார் முருங்கன் பரிகாரி கண்டல் கிராமத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு முகமூடி அணிந்த இருவர் ஆயுத முனையில் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் நேற்று முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

முருங்கன் பரிகாரிகண்டல் கிராமத்தில் உள்ள ஜீவோதய பண்ணைக்கு அருகாமையில் உள்ள வீடொன்றினுள் இரவு 7.30 மணியளவில் முகமூடி அணிந்த வாறு கத்தியுடன் நுழைந்த இருவர் அங்கிருந்த பெண்ணை அச்சுறுத்திவிட்டு அவர் அணிந்திருந்த 5 பவுண் தங்கச் சங்கிலியைப் பலவந்தமாக அபகரித்த பின்னர் வீட்டின் பின் புறத்தில் உள்ள காட்டுப்பகுதியூடாகத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டில் குறித்த பெண்ணும் வாய் பேச முடியாத நிலையிலுள்ள அவருடைய கணவரும் இருந்த நிலையிலேயே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-12)

"இந்த வீட்டில் குறித்த பெண்ணும் வாய் பேச முடியாத அவருடைய கணவரும் இருந்த நிலையிலேயே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## 25 ஆண்டுகளாக புனரமைக்கப்படாத நிலையில்

# குடிதண்ணீர் கிணறு

அக்கராயன், ஜூலை 16


அக்கராயன் இம்மாஸ் நகரில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக 30 குடும்பங்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர்க் கிணறு புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதாக இங்கு வசிக்கும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தக் கிணற்றின் உட்பகுதி இடிந்து வீழ்ந்து கொண்டிருப்பதால் இங்கு வசிக்கும் குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அக்கராயன் பகுதியில் வழக்கமாக ஜூன், ஜூலை மாதங்களில் குடிதண்ணீர் நெருக்கடி நிலவி வருவது வழக்கமாகும்.

இங்கு நிலவும் குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமாயின் பௌஸர் மூலமாக குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டுமென கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## குழாய்க் கிணறுகள் பழுதடைந்ததால் சிரமம்



கிளிநொச்சி அக்கராயன் பகுதியிலுள்ள கெங்காதரன் குடியிருப்பில் அமைக்கப்பட்ட ஏழு குழாய்க் கிணறுகளில் நான்கு பழுதடைந்துள்ளதால் இங்கு குடிதண்ணீரைப் பெறுவதில் கிராம மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 36 குடும்பங்கள் வசிக்கும் இந்தக் குடியிருப்பில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு முக்கியமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

இதேவேளை அக்கராயனில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிதண்ணீர்த் திட்டத்தில் கெங்காதரன் குடியிருப்பு முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கிராமத்துக்கு வீதியொன்றை அமைத்து வழங்குமாறு கிராம மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்தக் குடியிருப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து நிரந்தரமாக வீதியொன்று உருவாக்கப்படாமையால் மழை காலங்களில் மழை வெள்ளம் தேங்கி நின்று போக்குவரத்துக்கு பெரும் சிரமம் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)


# சர்வதேச விதவைகள் தினம்

நெடுங்குளம், ஜூலை 16

வவுனியா வடக்கில் சர்வதேச விதவைகள் தினம் கொண்டாடப்பட்டது. லண்டனின் நம்பிக்கை ஒளி, நெதர்லாந்து மனிதநேய செயற்பாடுகளுக்கான கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள நயினாமடு பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த 23ஆம் திகதி சர்வதேச விதவைகள் தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சமாசத்தின் தலைவர், உபதலைவர், இயக்குனர்சபை உறுப்பினர்கள், செயலாளர், வெளிக்கள அலுவலர்கள், வவுனியா தெற்குப் பிரதேச சன சமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-402)

# ஆரம்பமானது சிறுபோக அறுவடை



வவுனியா, ஜூலை 16

வவுனியாவில் சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியா-வாரிக்குட்டியூர், பம்பைமடு, பூந்தோட்டம், நொச்சி மோட்டை, ஓமந்தை ஆகிய பகுதிகளில் விவசாயிகள் நெல் அறுடையில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கடந்த பெரும்போக பயிர்ச்செய்கையில் விவசாயிகள் பெருநட்டத்தை எதிர்கொண்டிருந்தனர். பயிரழிவுக்கான இழப்பீடு எவையும் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இந்த நிலையில் சிறுபோக நெற்செய்கை இந்த முறை நல்ல விளைச்சலைத் தரும் என்றும் அதன் மூலம் கடன் தொல்லையில் இருந்து மீள முடியும் என்ற நம்பிக்கையுடனும் விவசாயிகள் காத்திருக்கின்றனர். (ஐ-402)

# வவுனியா நகரில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஜூலை 16

வவுனியா நகர சபையினர் நடமாடும் சேவை மூலம் நகரப் பகுதி மக்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் வரி அறவிடல், உரிமைச்சான்றிதழ் வழங்குதல், மக்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் பிரச்சினைகளைக் கேட் டறிதல் உட்பட பல்வேறு விடயங்கள் இதன் மூலம் தீர்க்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ''ஏசியன் பவுன்டேசன்'' நிறுவனத்தினர் இந்த நடமாடும் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். (ஐ-402)



# வவுனியாவில் ஜோதிலிங்க தரிசனம்

நெடுங்குளம், ஜூலை 16

இந்தியாவின் மகிமை வாய்ந்த 12 ஜோதிலிங்கங்களை தரிசனம் செய்யும் வாய்ப்பு வவுனியா மக்களுக்குக் கிடைத்துள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை காலை 8 மணி தொடக்கம் இரவு 8மணி வரை ஜோதிலிங்கங்களை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் பார்வையிட முடியுமென இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்கு விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாகப் பாடசாலை அதிபர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-402)

# தரமான உத்தியோகத்தர்கள் மன்னாரில் நியமனம்

## அமைச்சரின் இணைப்பாளர் பெருமிதம்

மன்னார், ஜூலை 16

மன்னார் மாவட்டத்தில் தரமான உத்தியோகத்தர்கள் சமுர்த்திப் பணிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தரமான சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்குடன் அமைச்சர் றிஸாத் பதியுதீன் இந்த நியமனங்களை வழங்கியுள்ளார். இவ்வாறு அமைச்சர் றிசாத் பதியுதீனின் மாவட்ட இணைப்பாளர் என்.எம். முனவ்பர் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி வடக்கு வங்கி அண்மையில் பேசாலை கலாசார மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

தற்போது நியமிக்கப்பட்டுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களின் சேவை திருப்தி இல்லை என்றால் எங்களிடம் முறையிட முடியும். மக்களின் தேவைக்காகவும், மக்களுக்குச் சேவை செய்வதற்காகவும் இந்த உத்தியோகத்தர்கள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 17 வருடங்களுக்கு முன்னர் ஏனைய மாவட்டங்களில் சமுர்த்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்றார். (க-12)

# கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி, ஜூலை 16

கிளிநொச்சி முரசுமோட்டை, புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட இருவருக்கு சுமார் ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

முரசுமோட்டை ஊரியான் இரண்டாம் யுனிற் பகுதியில் சுமார் இரண்டரைப் போத்தல் கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 11 ஆம் திகதி கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபர் மறுநாள் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதிவான், சி.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்த நபருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

குறித்த நபர், ஏற்கனவே கசிப்புடன் கைது செய்யப்பட்டு ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று புளியம்பொக்கணைப் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி இரண்டு போத்தல் கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபரொருவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-6)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடி வந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** அதிகாரபூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும்.

**கடகம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**சிங்கம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.

**கன்னி:** இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்து போகும். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

**நாளை**

ஆடி-01 புதன்கிழமை 17.07.2013
திதி: நவமி பி.ப. 02.23 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப.04.43 வரை
சுபநேரம்: 04.30 - 06.00 வரை
இராகுகாலம்: 12.00 - 01.30 வரை

**துலாம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். அரச காரியங்கள் இழுபறியாகும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள்.

**மகரம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத் திறன் அதிகரிக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**கும்பம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். அடுத்தவர்களைக் குறை கூறுவதை நிறுத்துங்கள். உங்கள் திறமையை சிலர் குறைத்து மதிப்பிடுவார்கள். உத்தியோகத்தில் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப் பாருங்கள்.

**மீனம்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | | | 3 | |
| | | | 5 | | | | | 9 |
| 9 | 3 | | 1 | 8 | 6 | 7 | 2 | |
| 1 | 5 | | 8 | | 4 | | | |
| 2 | 9 | | 3 | | 1 | | 6 | 8 |
| | | | 7 | | 9 | | 5 | 1 |
| | 2 | 1 | 6 | 9 | 3 | | 4 | 7 |
| 3 | | | | | 8 | | | |
| | 4 | | | | | | | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 2 | 5 | 1 | 3 | 7 | 4 | 6 |
| 3 | 5 | 6 | 7 | 4 | 8 | 1 | 2 | 9 |
| 7 | 1 | 4 | 6 | 9 | 2 | 5 | 3 | 8 |
| 4 | 8 | 3 | 1 | 7 | 9 | 6 | 5 | 2 |
| 2 | 7 | 5 | 4 | 8 | 6 | 9 | 1 | 3 |
| 1 | 6 | 9 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 5 | 4 | 8 | 2 | 6 | 7 | 3 | 9 | 1 |
| 9 | 2 | 7 | 8 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 6 | 3 | 1 | 9 | 5 | 4 | 2 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

பரீட்சையில் வெற்றி பெறுவோரின் ஒரே தெரிவு
புலமை 40
புலமைச்சுடர்
புலமை : 40
15.07.2013 - 21.07.2013
தரம் 5,4 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைய அவசியமான ஒரு வாரகாலப் பயிற்சிகளைத் தாங்கி வரும் ஒரே கையேடு
GRADE 4
GRADE 5
41 ஆம் இதழில் இருந்து 100% பரீட்சையை நோக்கிய பயிற்சிகள்
தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், தரம் 4, 5 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள், மேலும் பல தகவல்களுடன்
கண்டி தெல்தோட்டையில் புலமைச்சுடர் நடாத்தும் தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு...
மேலதிக விபரங்கள் 20 ஆம் பக்கத்தில்
இவ்வாரக் கையேட்டை அலங்கரிக்கும் எமது வளவாளர் குழாம்



எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக
(c/10377)
உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்
தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 08.03.1931
உதிர்வு 16.06.2013

**திருமதி மணிமேகலை சிவசுந்தரம்**

கடந்த 16.06.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றி களைத் தெரிவிப்பதுடன், நாளை (17.07.2013) புதன் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அபிராமி ஸ்ரோர்ஸ்,
ஆலடி, வல்வெட்டித்துறை.
(C/10484)(10,6,3)
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
உதிர்வு

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வைரவர் கோயிலடி பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி**

அரவணைப்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிசமாய்
சுமை தாங்கியாய் வாழ்ந்து
எமது இதயத்தின்
அணையாத தீபமாய் சுடர் வீசும்
மறைந்தும் மறையா - எம் அப்பாவின்

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகிறோம்.

வைரவர் கோயில் கிழக்கு,
பரந்தன் நகரம், கிளிநொச்சி.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(37474)(10,6,3)

## சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை கல்வி நிலை சீர்

தென்மராட்சி, ஜூலை 16
சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் ஐந்து வகுப்பில் கற்பித்த ஆசிரியை ஒருவர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் விடுமுறையில் சென்றதால் மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டது.
கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு மேன்முறையீடு செய்த ஆசிரியைக்கு ஜூன் 30 ஆம் திகதி வரை கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டது.
எனினும் முதலாம் திகதி தொடக்கம் குறித்த ஆசிரியை விடுமுறையில் நின்றதால் ஏற்கனவே இடமாற்றம் வழங்கப்பட்ட பாடசாலைக்கு சென்று விட்டதாகக் கருதிய மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல பின்னடித்தனர். அதேசமயம் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை நெருங்கும் வேளையில் ஆசிரியை இடமாற்றம் செய்யப்பட்டதாக பெற்றோரும் கருதிவிட்டனர்.
இதேவேளை, கல்வித் திணைக்களத்தினால் குறித்த ஆசிரியர்களுக்கான இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டு கடந்த ஐந்தாம் திகதி மீண்டும் அவர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். தற்போது வகுப்புகள் நடைபெற்று வருவதாக பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார்.
இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லையென வலயக் கல்வி அலுவலகத்தினரும் உறுதிப்படுத்தியுள்ளனர். குறித்த ஆசிரியையின் இடமாற்றம் தொடர்பாக மாணவர்களும் பெற்றோரும் குழப் படைந்த தான செய்தி கடந்த வெள்ளிக்கிழமை உதயனில் வெளியாகி இருந்தது. (ஒ-9)

## காய்ச்சல் வந்தால் அலட்சியப்படுத்தாதீர் உரிய சிகிச்சை பெறாவிடில் விபரீதம் ஏற்படும்

### கவனயீனத்தால் அராலியில் குடும்பப் பெண் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 16
எட்டு நாள்களாக நியூமோனியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இளம் பெண்ணுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படாததனால் அவர் உயிரிழந்தார்.
உறவினர்களின் கவனயீனமும், அராலி, கொட்டைக்காடு வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இருந்தபோதும் சாரதி இல்லா திருந்தமையும் பெண்ணின் உயிரிழப்புக்கு காரணமாகி விட்டன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த யோகேஸ்வரன் விஜயகுமாரி (வயது-25) என்பவரே உயிரிழந்தார்.
இவர் 8 மாதக் குழந்தைக்குத் தாயாவார். குறித்த பெண்ணுக்கு காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து இரண்டாம் நாள் சிகிச்சை பெற்றிருந்தார். எனினும் அது மாறவில்லை. இருந்தபோதும் அவரோ அவரது உறவினர்களோ மேலதிக சிகிச்சை பற்றி கருத்தில் எடுக்கவில்லை.
எட்டாவது நாளான நேற்று அதிகாலை அவர் மிக மோசமான கட்டத்தை அடைந் திருந்தார். அதை அடுத்து அதிகாலை 4.30 மணியளவில் கோட்டைக்காடு வைத்தி யசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.
அவரை மேலதிக சிகிச்சைக் காக உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லவேண்டியேற்பட்டது. அங்கு அம்புலன்ஸ் இருந்தது. ஆனால் சாரதி இருக்கவில்லை. அவர் விடு முறையில் சென்று விட்ட தாகக் கூறப்பட்டது.
பின்னர் சங்கானை வைத்திய சாலைக்கு அதுபற்றி அறிவித்து அதன் பின்னரே அங்கிருந்து கோட்டைக்காடு சென்று நோயாளியை ஏற்றிக் கொண்டு யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டார். எனினும் வெளிநோயாளர் பிரிவில் அவர் சேர்க்கப்பட்டபோதே அவர் உயிரிழந்துவிட்டமை தெரியவந்தது.
ஒருவருக்கு சாதாரண காய்ச்சல் ஏற்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறமுடியும். மூன்று நாள்களுக்கு மேலாகியும் காய்ச்சல் குணமடையவில்லை என்றால் அவரை ஆதார வைத்திய சாலைகளுக்கு அல்லது யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்று பரிசோதனை செய்து, சிகிச்சை பெற வேண்டும் என்று வைத்தியர்கள் அறிவுறுத்தி யுள்ளனர்.
விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டது.(ஒ-4-78)

## குருநகர் யாகப்பர் ஆலய திருவிழா இன்று ஆரம்பம்

குருநகர், ஜூலை 16
குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் இன்று செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள திருப்பலி நிறைவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
நவநாள் ஆராதனைகள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலை வழிபாட்டுடன் நடைபெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 7 மணிக்கு முதல்நன்மை வழங்கும் திருப்பலி நடைபெறும். எதிர்வரும் 24 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் 25 ஆம் திகதி திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.
முதலாம் திருப்பலி காலை 5 மணிக் கும் தொடர்ந்து திருநாள் திருப்பலி காலை 6.15 மணிக்கும் யாழ்.ஆயர் தலைமையில் நடைபெறும். தொடர்ந்து அன்று மாலை 5 மணிக்கு புனிதரின் திருச் சொரூபப் பவனியும், திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும் என குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வணபிதா ஆர். நேசராஜா அடிகளார் தெரிவித்தார்.(வ-51)

## நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 16
கைதடி லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக இ.குழந்தைவடிவேலு, செயலாளராக எஸ்.லவ்மிகரன், பொருளாளராக கே.வி.குமாரசாமி ஆகியோரும், நிர்வாக உத்தியோகத்தர்களாக எஸ்.பவளகுமார், எஸ்.கௌரீதாசன், எஸ்.கலைச்செல்வி, ரி.சுபத்திரா, எஸ்.மயூரன், ரி.மகேந்திரம், எஸ். நிர்மலாதேவி, எஸ்வானதி, நா. திருச்செந்தூர்நாதன், வி.எஸ். மகேந்திரம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ந-14)

## அடையாளம் காட்டி உதவுமாறு யாழ். பொலிஸார் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ். பண்ணையில் தனியார் பஸ் நிலையத்தில் சடலமாக மீட்கப்பட்டவரை அடையாளம் காட்டி உதவுமாறு யாழ். பொலிஸார் கோரியுள்ளனர்.
கடந்த வெள்ளிக்கிழமை சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.
40 வயதுக்கும் 50வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர் என மதிப்பிடப்படும் இவர் வெள்ளை, நீலம் கலந்த சேர்ட் மட்டும் சறம் அணிந்திருந்தார். வலது முழங்கையிலும், வலது முழுங்காலிலும் பழைய காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தகவல் தெரிவித்தனர். (ஒ-4)

## கண்ணீர் அஞ்சலி

**பொன்னையா பரராஜசேகரம்**
(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)



கொழும்பில் காலமான எமது சக நில அளவையாளரது மறைவுக்கு இரங்கலைத் தெரிவிப்பதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம்(வடபகுதி)
(30928)(3.6.11)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சபாபதி வீரசிங்கம்**
தோற்றம் 04.10.1931
மறைவு 14.07.2009

*நான்காண்டுகள் கடந்து போனது எப்படி அப்பா!*
*இன்னும் எங்கள் உள்ளங்களில் அப்படியே வாழ்கின்றீர்கள்*
*மண்ணுக்குள் போனீர்கள் என்று எங்கள் மனம் நம்பவில்லை*
*விண்ணுக்குள் இருந்து வழிகாட்டி எங்களை*
*வழி நடத்துகின்றீர்கள் அப்பா!*
*ஓம் சாந்தி!*

நாவலடிலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(30596) (3.6.45)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் மகளிர் அபிவிருத்தித் நிலைய தையல் போதனாசிரியராகக் கடமையாற்றும் வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் திருமதி கொலஸ்ரிகா திருச்செல்வம் அவர்களின் அன்புத் தந்தையார்
**பஸ்தியாம்பிள்ளை சிறில் அவர்கள்**
11.07.2013 அன்று இறைபதம் அடைந்ததனையிட்டு அன்னாரது குடும்பத்தின்ருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
தலைவர், அங்கத்தவர்கள் (30899) (45.6.3)
கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிக்கழகம் - யாழ். மாவட்டம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் **ச.கதிர்வேற்பிள்ளை** அவர்களின் பாசமிகு தாயார்
**சதாசிவம் சிந்தாமணி**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
காணி மாவட்டப் பதிவகம்,
யாழ்ப்பாணம்.
(30893) (10,6,3)
ஊழியர் நலன்புரி
சங்கம்.

## மெய்வன்மைப்போட்டி

கொழும்புத்துறை, ஜூலை 16
பாஷையூர் புனித அந்தோனியார் பகல் பராமரிப்பு முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந-135)

## சமய சந்நிதிகளில்

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன்னை ஆலய வருடாந்தப் பெருவிழாவில் இன்று செவ்வாய்க்கிழமை திருநாள் திருப்பலி காலை 6.30 மணிக்கு இடம்பெறும். யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமை யில் கூட்டு திருப்பலியும், அன்னையின் திருச் சொரூபப் பவனியும் இறை ஆசீயும் இடம்பெறும்.(ந)

★ ★ ★

குருநகர் தூய கார்மேல் அன்னை ஆலயத்தின் திருநாட் திருப்பலி இன்று செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு திருச்சொருப பவனியும் அன்னையின் திருச்சொருப ஆசீரும் இடம்பெறும்.(ந-51)

## 5ஆம் ஆண்டு நினைவில்....



தோற்றம் 17 . 07 . 1979
மறைவு 16 . 07 . 2008

அமரர் **கணபதி ஞானசீலன்**
(முன்னாள் பாரவூர்தி சங்கப் பணியாளர்)

ஆசை மகனே! அன்புத் தம்பியே!
எம் ஆருயிர் சித்தாவே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
எங்கே போனீர்கள்?
ஆண்டுகள் ஐந்தென்ன ஐம்பது போனாலும்
அகலாது எமைவிட்டு உம் நினைவு.
ஓம் சாந்தி!

விவேகானந்த நகர்,
கிளிநொச்சி.
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10.12.1968
உதிர்வு 27.06.2012



யாழ். வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட
அமரர் **வேலுப்பிள்ளை விஜயகுமார்**
[விஜயன்]

*மணம் முடித்த நாள் முதலாய் என் மனக் கவலை நீக்கி*
*நலமாக நான் வாழ நினைத்ததெல்லாம் நிறைவு செய்தீர்*
*மணவறையில் தாலி கட்டி இணைந்த நாள் முதலாய்*
*இன்பமுடன் வாழ்ந்தோமே —அன்பு மனைவி*
*அன்பு மகனே அம்மாவைத் தவிக்க விட்டு சொல்லாமல் சென்றீரே!*
*முத்தாக ஆறு பெற்று ஐந்தாவதாய் உதித்தாய்!*
*உன்னைத் தண்டித்து ஓர் அடி கூட அடித்ததில்லையே!*
*— அப்பா*
*பாசத்தை மட்டும் தந்து விட்டு இன்று காணாமல் போனதேனோ?*
*—அன்பு அம்மா*
*ஆசைப் பிறவியே அடித்துக் கதறுகின்றோம்*
*நேசத்தின் உறைவிடமே நேரில் பார்ப்பதெப்போ?*
*—உறவினர்கள்*
(37485)(3.6.11)

# தமிழ்த் தேசியம் தொலைந்து விடுமா?

## கவலைப்படுகிறார் பிரபா எம்.பி.

கொழும்பு,ஜூலை 16
நாட்டிலுள்ள தற்போதைய முக்கிய பிரச்சினை வடமாகாண சபை தேர்தலில் தமிழ் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதே ஆகும். இருப்பினும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இருக்கும் இழுபறி தமிழ் தேசியத்தை தொலைத்துவிடும் என்ற எண்ணத்தை தோற்றுவித்துள்ளது. ஆகவே தமிழ்த் தேசியம் காப்பாற்றப்பட வேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-



ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அரசின் ஒரு பங்காளிக் கட்சியாக இருந்தாலும் கூட தமிழ் தேசியத்தில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன்.

ஆனால் தமிழ் தேசியம் என்பது தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு மட்டும் உரித்தானதல்ல. இருப்பினும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அதிக வாக்குகளைப் பெற்ற பிரதிநிதித்துவ கட்சியாகத்தான் நான் பார்க்கின்றேன். இந்தக் கட்சிக்குள் இழுபறியாக இருக்கும் முதலமைச்சர் வேட்பாளர் சம்பந்தமாக நடைபெறும் பிரச்சினைகளைப் பார்க்கும்போது இவர்கள் தமிழ்த் தேசியத்தை தொலைத்து விடுவார்களா என்ற சந்தேகம் எழுகிறது. அரசியலில் அதிக அனுபவமற்றவர்களை முதலமைச்சர் பதவிக்கு முன் நிறுத்துவதன் மூலமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இருக்கும் பிரிவினைவாதம் வெளி உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டுள்ளது. கூட்டமைப்புக்குள் இருக்கும் ஒற்றுமையே தமிழ்த் தேசியத்தை வளர்க்கும் என்ற எமது மக்களின் நம்பிக்கை தவிடுபொடியாகியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வடமாகாணசபை தேர்தலை ஆரோக்கியமாக தான் சந்திப்பதற்கு தயார் என்று சொல்லும் அளவுக்கு இடம் கொடுத்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையின்மையே. நாங்கள் அரசில் இருந்தாலும் கூட அரசின் தமிழ் எதிர்ப்பலைகளை வன்மையாகக் கண்டித்து வருகின்றோம். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் நிலவி வரும் இன்றைய இழுபறி எம்மையும் பாதிக்கும் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். அதனடிப்படையில் அரசியல் அனுபவமிக்க ஒரு வரை கூட்டமைப்பு களத்தில் நிறுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. - என்றார். (வ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



மந்துவில் மேற்கு
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
**தர்மகுலசிங்கம் யுகதீஸ்வரா**
(இலங்கை வங்கி-மன்னார்)


அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 11.07.2013 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறந்த சமூக சேவைகள் செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**மந்துவில் மேற்கு,**
**கொடிகாமம்.**

வாழ்த்துபவர்கள்:
**உறவினர்கள்.**

(30898)(10,6,3)



யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட அன்னலிங்கம் பிறேம் சங்கர் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். நீதிமன்ற உத்தியோகத்தர்கள் அவரை வரவேற்றனர். யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் மற்றும் வடமாகாண நீதிபதிகள், நீதிவான்களும் நிகழ்வில் கலந்து கொண்டு நீதிபதியுடன் கலந்துரையாடினர். (ஒ-4)

# அறிக்கைகளை வெளியிடுவது கேலிக்கூத்தான செயல்

## நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 16
பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் மீதான இனவாத அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் அறிக்கைகளை வெளியிடுவதும் பாதுகாப்பு செயலருக்கு கடிதம் எழுதுவதும் கேலிக் கூத்தான செயல் என்று நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

மஹியங்கனை மஸ்ஜிதுல் அரபா பள்ளிவாசல் மீதான தாக்குதலைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் பல பள்ளிவாசல்கள் தாக்கப்படுவதும்,முஸ்லிம் சமூகத்தினர் மீதான அடாவடித் தனங்கள் கட்டவிழ்த்து விடப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதன் போதெல்லாம் முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்து வருகின்றன.

மஹியங்கனை பள்ளிவாசல் தாக்கப்பட்டமையை எமது அமைப்பும் கண்டிக்கின்றது. இனவாத வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தத் தவறும் அரசு தான் இந்தச் சம்பவத்துக்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)

**Do you want to make a career in Singapore Construction Industry ?**




REQUIREMENTS
1. Must have basic English proficiency
2. Accommodation and meals provided during training
3. Training duration: 30 - 60 days
4. No experience required although skilled workers are preferred

TRAINING
Our training programme includes, among others, carpentry, brick laying, tiling, electrical fitting, welding, pipe fitting, suspended ceiling, internal drywall installation, thermal insulation, aluminum form-work.

*Singapore, your gateway to a fulfilling future in the construction industry*

Upon the successful completion of the training programme, each candidate will Receive the Trade Certificate which guarantees the person a job in Singapore. Progressive Lanka OTC (Pvt) Ltd / Neo Global (Pvt) Ltd's training center is located in Kalaniya, with regional presence in Thailand, India, Bangladesh, Myanmar, Vietnam, Pakistan and China too.

Enrole Now! & Meet Your Opportunites With Us!
Call Us On : 0114333111

Accredited by the BCA Singapore Building and Construction Authority

185/A, Kelanimulla Ambatale, Mulleryawa New Town, Sri Lanka

**விசேட கருத்தரங்கு**
**க.பொ.த. உயர்தரம்-2013**
**யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை.**

கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல்யமான வளவாளர்களினால் 2013 பரீட்சைக்குத்தோற்றும் உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கு இலகுவழி கற்றல் நுட்பங்களையும், பரீட்சை வழி காட்டல்களையும் வழங்குவதை நோக்காகக் கொண்டு விசேட கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

| திகதி | பாடம் | வளவாளர்கள் |
|---|---|---|
| 16.07.2013 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி | தமிழ் | கலாநிதி S.S. ஆனந்தன் |
| 17.07.2013 புதன்கிழமை காலை 8.30 மணி<br>18.07.2013 வியாழக்கிழமை காலை 8.30 மணி | அரசியல் விஞ்ஞானம் | V.K. செல்வா |
| 19.07.2013 வெள்ளிக்கிழமை காலை 8,30 மணி | புவியியல்<br>பொருளியல் | K. கிரிசாந்<br>வே. கருணாகரன் |
| 19.07.2013 வெள்ளிக்கிழமை- காலை 8.30 மணி | இந்து நாகரிகம் | M.V. ஜோதீஸ்வரன் |
| 23.07.2013 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி | அளவையியல் | S. சயந்தன் |

தொடர்ந்து ஏனைய பாடங்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறும். அதற்குரிய நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

**அனுசரணை வழங்குபவர்:**
கலாநிதி சிவபவானந்தா, மகாஜனன்,
பொறியியலாளர், இங்கிலாந்து.

**குறிப்பு:** இக்கருத்தரங்கு அனைத்துக்கல்லூரி மாணவர்களுக்கும் இலவசமாக நடைபெறும் அதேவேளை, ஏனைய கல்லூரி மாணவர்கள் கருத்தரங்குக் குறிப்புக்களைப் பெறுவதாயின் உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**மகாஜனக்கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம்,**
**பழைய மாணவர் சங்கம்.**

(சி/10487) (10.6.7)

# சர்வஜன வாக்கெடுப்பு திடீரென கைவிடப்பட்டது எதற்காக?

13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டால் பெரும்பான்மை மக்கள் தமது விருப்பத்தை சிறுபான்மையோர் மீது திணிக்கப் பார்க்கிறார்கள் என்ற ஒரு கருத்து ஏற்படக்கூடும் என்பதால் தான் அதனை தற்போதைக்கு அரசு கைவிட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சியினர் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் இடம்பெறாமல் போனமை அரசுத் தலைவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் சொல்லப் போனால் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கான செயற்பாட்டில் ஈடுபடுகின்ற அரசு தரப்புக் குழுவாகவே அது காணப்படுகின்றது. த.தே.கூட்டமைப்பு பங்குபற்ற இணங்குமானால் ஐ.தே.கவும் அதில் பங்கு பற்றும். எனவே இவை பங்குபற்றாத நிலையில் குழுவின் பரிந் துரைகள் எந்த அளவில் நம்பிக்கையானவை என்ற கேள்வி எழக்கூடும்.

ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமானவர்கள் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெறும் வகையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதன் சாதகபாதக நிலைமைகள் பற்றி ஆராய்ந்துள்ளார்கள். அரசமைப்புத் திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கு ஆதரவாக தென் பகுதியில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் வடக்கு, கிழக்கில் தீர்ப்பு வேறாகவே இருக்கும் என் பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாகாணங்களிலும் அங்குள்ள மக்கள் தொடர்பானதாகவே இந்த மாற்றங்கள் இருக்கும் என்பதால் பெரும்பான்மையானவர்கள் அதனை நிராகரித்து விடுவார்கள். இது பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் மீது தம் கருத்தைத் திணிக்க எத்தனிக்கிறார்கள் என்ற கருத்தை உருவாக்கும் என்பதால் இப்போதைக்குகாவது இந்த வாக்கெடுப்பைக் கைவிடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மன்மோகன்சிங் கலந்து கொள்வாரா?**

சிவ்சங்கர் மேனன் இலங்கைத் தலைவர்களுடன் நடத்தியுள்ள பேச்சுக்களைப் பார்க்கையில் நவம்பரில் பொதுநலவாய உச்சி மாநாடு இடையூறு இன்றி நடந்து முடியுமா என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. இதில் முக்கிய கேள்வி என்னவென்றால் இந்தியாவின் தரப்பில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் உயர் மட்டக்குழு வருமா அல்லது தரம் குறைந்த ஓர் அமைச்சர் தலைமையில் குழுவொன்று வருமா என்பதாகும். இதெல் லாம் வடமாகாணத் தேர்தல் இடையூறின்றி நடந்து முடிவதைப் பொறுத்து இருக்கிறது என்று ராஜதந்திர வட்டாரங் கள் தெரிவிக்கின்றன. (ப)

## நடமாடும் சேவை

தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடமாடும் சேவை நாளை புதன்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த சேவையில் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்கள் பிரிவில் எதிர்வரும் வட மாகாண சபைக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதி யுள்ள இதுவரை தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாமல் உள்ள வாக்காளர்கள் பயனடையலாம். இந்த நடமாடும் சேவைக்கு தேசிய அடையாள அட்டையைப்பெற்றுக் கொள்வற்கான தம்மிடம் உள்ள ஆவணங்களையும் சான்றிதழ்களையும் புகைப்படங்களையும்கொண்டு வந்து தேசிய அடையாள அட்டைகள் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என யாழ். பிரதேச செயலகம் தெரிவித் துள்ளது. (ந-51)

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம் சிவபாதம்

*(ஓய்வு பெற்ற தபாலதிபர்)*

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவபாதம் நேற்று (15.07.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெய்வநாயகியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் - சின்னம்மா (பருத்தித்துறை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், சரவணமுத்து -லட்சுமிப்பிள்ளை (சுன்னாகம்) தம்பதியரின் மருமகனும், இராஜேந்திரம், கமலேஸ்வரி, விஜயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீபரன் (U.K), திலீபன் (France), தனுஷியா (சிறுப்பிட்டி அ.த.க.பா), திருப்பதிகாந்தன் (வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவரூபினி (U.K), செல்வி (France), அரவிந்தன் (பி.உ.உ.ஆ.அலுவலகம், முல்லைத்தீவு), ஜெகஜனனி (வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்) ஆகியோரின் மாமனும், விஸ்வாதிகா, வேதுஷன், அபர்நாத், கஜானிக்கா, அபர்னிக்கா, அனிஷ்ஷாந், அனிஷ்காந் ஆகியோரின் பாசமிகு பேரனும், மங்களநாயகி, இராசநாயகி, செல்வநாயகி, ஜெயந்தன், வாகீசன், சுசீலா தேவி, சீவரத்தினம், தில்லைநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (18.07.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாவற்கட்டை வீதி,
கோப்பாய் வடக்கு.

தகவல்: திருப்பதி காந்தன் (மகன்)

### தம்பிராஜா சிவநாதன் (J.P)

M.L.T (ஓய்வுநிலை, இளைப்பாறிய திடீர் மரண விசாரணை அதிகாரி-மட்டக்களப்பு)



மட்டக்களப்பைச் சேர்ந்த தம்பிராஜா சிவநாதன் நேற்று (15.07.2013) திங்கட்கிழமை வவுனியாவில் இறையெய்தினார்.

அன்னார் திலகவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) யின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுரேஸ் (ஜேர்மனி) மற்றும் திருமதி சகீலா (கனடா), கிஷோர் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வவுனியா மாவட்டக்கிளை), திருமதி சுரேக்கா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, பாக்கியநாதன், திருமதி அந்தோனிப் பிள்ளை பவளம் மற்றும் திருமதி அருந்ததி நவரட் ணம், காலஞ்சென்றவர்களான திருமதி சண்முக ரட்ணம் சுகிர்தம், தம்பிராஜா அருள்நாதன் மற்றும் தம்பிராஜா இந்திரநாதன், தம்பிராஜா விமலேந்திரன், காலஞ்சென்ற திருமதி ஞானப்பிரகாசம் வசந்தா மற் றும் திருமதி சங்கரதாஸ் இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2013) புதன்கிழமை இறம்பைக்குளம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4 மணிக்கு இறம் பைக் குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

363, இறம்பைக்குளம் வீதி,
வவுனியா.
தொ.பே.இல.
024 222 2068
077 315 4254

(சி/10494) (10.16)

தகவல்:
சிவநாதன் கிஷோர்
(முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.(மகன்).

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லைநாதர் பாக்கியரட்ணம் (செல்வராணி)

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், 11, சென்லோறன்ஸ் றோட், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதர் பாக்கியரட்ணம் (14.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னையா தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்ற Dr. தில்லைநாதர் அவர்களின் பாசமிகு மனைவியும், ராஜினி (கொழும்பு), ஸ்ரீதரன் (சட்டத்தரணி, கனடா), வசந்தினி (U.K) ஆகியோரின் பாசமிகு தாயும், செல்லத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சியாமினி (கனடா), Dr.சிவதாசன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற அரியரட்ணம் (A.G.A) அவர்களின் அன் புச் சகோதரியும், விதூஷனன் (பொறியிலாளர், ஆஸ்திரேலியா), சிவானி (கனடா), கேசன் (கனடா), Dr.நிரோஷன் (U.K), Dr.நிருபா (U.K) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தர்மலிங்கம், கனகாம்பிகை, அருணாசலம், சரசாம்பிகை ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கமலாவின் பெரிய தாயும், தனலட்சுமியின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.07.2013) செவ்வாய்க்கிழமை காலை முதல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(30934) (10,6)

தகவல்: பொன் ஸ்ரீ வாமதேவன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்-மருமகன்)

### மாரிமுத்து சிவபாதம்

*(உரிமையாளர், அனுஜா ஸ்ரோர்ஸ், கொம்பனித்தெரு)*



பன்னாலை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், கொழும்பு கொம்பனித்தெருவை வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிவபாதம் கடந்த (13.07.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து -செல்வநாயகி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் மருமகனும், சறோஜாதேவியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம், வேலாயுதம், காலஞ்சென்ற நடேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சாரதாதேவி, காமாட்சிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், சிவதர்சன், சிவதீபன், தனுஜா, அனுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னகரன், நவதர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், வினுஷனின் அன்புப் பேரனும், சுதர்சன், மயூரன், அகிலன், நிறோஜன், சஜீவன், டேவிதா ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2013) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அந்திராணை,
பன்னாலை,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 16.06.2013 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தின் அச்சாணி

அமரர்

### கனகசபை இராஜநாயகம்

(சின்னண்ணை)

அவர்களின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (16.07.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் தாங்களும் வருகைதந்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'சகிலாலயம்',
அல்வாய்.

(C/10492)(10,16)

குடும்பத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
பல்கலைக்கழக அனுமதி – 2012/2013

## உளச்சார்புப் பரீட்சை (Aptitude Test)

## நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக்கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 07.08.2013 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### அனுமதிக்கான பொது நிபந்தனைகள்

#### அனுமதிக்கான தகைமைகள்

சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த)பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பட்ட பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம் - கர்நாடகம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

#### தகுதிகாண் பரீட்சை

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணபதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய தகுதி காண்பரீட்சைக்கு (Aptitude Test) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ·தோற்றுதல் வேண்டும்.

#### விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

விண்ணபதாரிகள் கீழேகொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பெற்றோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்தோ தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணபத்துடன் ரூபா. 150 ஐ ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக் கணக்கு இல. 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் **பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதிவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும்** அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும். விண்ணபதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23x10 ச.மீ அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 07.08.2013 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப்பதிவாளர் ,அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணபிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணபதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
15.07.2013

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
பல்கலைக்கழக அனுமதி – 2012/2013

நுண்கலைமாணி - இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்

தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் (Aptitude Test)

விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-

(தமிழிலும் ஆங்கிலத்திலும்)

முதல் எழுத்துக் குறிக்கும் பெயர்:-

தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்):-

தொலைபேசி இலக்கம்:- மின்னஞ்சல் முகவரி:-

2. க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேறு 2012:-

சுட்டிலக்கம்: Z புள்ளி: பொதுச்சாதாரண பரீட்சைப்புள்ளி:

| பாடம் | தரம் | மொழி மூலம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

3. பெற்றோர்/பாதுகாவலர் பெயர்:

முகவரி: (ஆங்கிலத்தில்):-

4. விண்ணபிக்கும் பாட நெறி:

| இசை | | நடனம் | | சித்திரமும் வடிவமைப்பும் | |
|---|---|---|---|---|---|

(தெரிவிற்கு √ இடுக)

சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

1. பணம் செலுத்திய பற்றுச்சீட்டு
2. உறுதிப்படுத்திய 2012 க.பொ.த (உ.த)பரீட்சைப் பெறுபேற்றுச்சான்றிதழ் (Z புள்ளி/மாவட்டம் உள்ளடங்கலாக)
3. பெயர் மாற்றம் செய்யின் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம்

என்னால் தரப்பட்ட மேற்படி விபரங்கள் யாவும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.

........................ ....................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி பதவி முத்திரை பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் கையொப்பம்.

(C/10488)

---

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

புண்ணியமூர்த்தி சண்முகதாசன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல 531183029V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0718562032 தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தரவும்.

(30931)(3.6.11)

---

## உடனடி வேலைவாய்ப்பு

உலகின் தலைசிறந்த நிதி நிறுவனம் ஒன்றின் துணை நிறுவனமான நிதி நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. நிதி ஆலோசகர்கள்
2. குழு முகாமையாளர்கள்
(சந்தைப்படுத்தல் துறையில் 2 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவம்)

**தகைமைகள்:**
க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**நன்மைகள்:**
1. அடிப்படைக் கொடுப்பனவுகள் உட்பட கவர்ச்சிகரமான கொடுப்பனவுகள்
2. வெளிநாட்டு சுற்றுலா வசதிகள்
3. வாகன கடன் வசதி
4. இலவச ஆயுள் மற்றும் மருத்துவ காப்புறுதி

**குறிப்பு:**
குறுகிய காலத்தில் அதிக வருமானம் பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம். அத்துடன் குறைந்தளவு வெற்றிடங்கள் உள்ளதால் உங்கள் சுயவிவரக் கோவையினை 22.07.2013 இற்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல.4462**
**மே/பா உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.**

(சி/10491)
(10,6,3)

---

# அறிவித்தல்

## மாகாண சபைத் தேர்தல் - 2013

ஏதேனுமொரு தேர்தலில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்புப் பிரிவுக்குள் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையத்துக்குப் பதிலாக வேறேதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக வாக்காளர் சார்பாக மேற்கொள்ளப்படும் ஒழுங்குகள்

1993 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மாகாண சபைத் திருத்தச் சட்டத்தினால் மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச் சட்டத்தினால்) திருத்தியமைக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 125 அ பிரிவின் மூலம் உரிய வாக்கெடுப்பு நிலையத்தில் தமது வாக்கினை அளிக்க முடியாமல் போகின்றமை பற்றிய நியாயமான பயம் காணப்படுகின்ற வாக்காளர்களுக்கு, வேறொரு வாக் கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான அனுமதியைக் கோர முடியு மெனவும் அதற்கமைய உரியவர்களுக்கு வாக்களிப்பதற்கான ஒழுங் கினை ஏற்பாடு செய்யமுடியுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. உரிய பிரிவு வருமாறு

"வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், எவரேனும் பதிவு செய்யப்பட்ட தேருநரின் வாக்கெடுப்பு நிலையம் எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பில் நிலவுகின்ற நிலைமைகள் காரணமாக அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்துக்கு வெளியே வதிவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளவரும், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் தமது வாக்கை அளிப்பதற்குத் தாம் இயலாதவராகவிருக்கக் கூடுமென நியாயமாகப் பயப்படுகின்றவருமான அந்தப் பதிவு செய்யப்பட்ட தேருநர், ஆணையாளரினால் அவரது தனித் தற்றுணிபில் தீர்மானிக்கப்படும் இன்னொரு வாக்கெடுப்பு நிலை யத்தில் தமது வாக்கை அளிப்பதற்குத் தமக்கு அனுமதியளிக்கும் படி வேண்டுகோள் விடுத்து பெயர் நியமன அறிவித்தல் திகதியிலிருந்து ஒரு வாரத்தினுள் தேர்தல்கள் ஆணையாளருக்கு விண்ணப்ப மொன் றைச் செய்யலாம்."

அவ்வாக்காளர்களுக்கு தத்தம் விண்ணப்பப்படிவங்களை வேட்புமனுக் கோரும் அறிவித்தல் தினத்திலிருந்து 7 நாள்களுக்குள் கொழும்பு இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திற்கோ தாம் வதிகின்ற மாவட்டத்தின் மாவட்ட செயலகத்திற்கோ சமர்ப்பிக்க முடியும். அவ்விண்ணப்பதாரர்களினால் 2012 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாக வைத்து உரிய விவரங்களை விண் ணப்பப்படிவங்களில் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். இத்தேருநர் பதிவேடுகள் தேர்தல்கள் செயலகத்திலும் மாவட்ட தேர் தல்கள் அலு வலகங்களிலும் வைக்கப்பட்டிருக்கும்.

விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரர் வதிகின்ற பிரதேசத்தின் கிராம அலுவலரினால் சரியானதென உறுதிப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தோ பிரதேச செயலகத்திலிருந்தோ, கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்தோ இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிப்பதற்கு விரும்புகின்ற வாக்காளர்களுக்கு தத்தம் விண்ணப்பப்படிவங்களை உரிய காலத்திற்குள் சமர்ப்பிப்பதில் ஏற்படுகின்ற இடையூறினைத் தவிர்ப்பதற்காக இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில் மேற்கொள்ளப்பட்டது போல விண்ணப்பப்படிவங்களை கையேற்கும் கால எல்ல 2013 ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

தாம் வாக்காளர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள வாக் கெடுப்பு மாவட்டத்திற்காக நிறுவப்படுகின்ற வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு இயலாது போகுமென நியாயமாக பயப்படுகின்ற வாக்காளர்கள் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் தமது வாக்கினை அளிப்பது தொடர்பான விண்ணப்பப்படிவங்களை 2013 ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரிக்கு அல்லது வதிவைக் கொண்டிருக்கின்ற மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய,
2013 ஜுலை மாதம் 16 ஆம் திகதி.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

(2.6.45.3)(சி/10489)

## வங்கியில் தவறிய பணம் யாருடையது?

யாழ்ப்பாணம், ஜூலை 16

இலங்கை வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் கடந்த 10 ஆம் திகதி தவற விடப்பட ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பணத்தை தவறவிட்டவர்கள் உரிய ஆதாரங்களுடன் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

# உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை இனி புதிய இடத்தில் இயங்கும்

## காணி வழங்கினார் சமூக நலன் விரும்பி

வடமராட்சி, ஜூலை 16

உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை தனியான காணியில் நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கென ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் 1ஏபி பாடசாலையாக உடுத்துறை மகா வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அதன் ஊட்டப் பாடசாலைகளில் ஒன்றாக உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் புதிய பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக உடுத்துறை மகா வித்தியாலயத்தின் கட்டடத்தின் ஒரு பகுதியில் தற்போது இயங்கி வரும் உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையை தனியான ஓரிடத்தில் இயங்க வைக்கவென வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவரும், அந்தப் பிரதேசத்தின் கல்வியில் அக்கறை கொண்டவருமான அன்பர் ஒருவர் உடுத்துறை மகா வித்தியாலயத்துக்கு 6 ½ பரப்புக் காணியை அன்பளிப்பாகவழங்கியுள்ளார்.

இந்தக் காணியில் உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையை ஆரம்பிக்க துரிதகதியில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைக்கு அந்தக் காணியில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இந்தப் பாடசாலைக்கெனத் தனி யான கட்டடம் ஒன்று நிர் மாணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

பிரதேச மக்களின் கல்வியில் அக்கறை கொண்ட அன்பர் ஒருவர் ஆரம்பப் பாடசாலைக்கு காணி வழங்கியமைக்கு அந்தப் பகுதி மக்கள் மட்டுமன்றி வலயக் கல்வித் திணைக்களமும், வடமராட்சி கிழக்கில் அக்கறையும், ஆர்வமும் கொண்ட அமைப்புக்களும் அன்னாருக்கு நன்றி தெரிவித்துள்ளன (ஒ-8)

## மு.கா தனித்து போட்டி?

கொழும்பு, ஜூலை 16

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத்தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

தனித்துப் போட்டியிடுவதே கட்சியிலுள்ள பெரும்பாலானோரின் அபிப்பிராயமாக இருப்பதாக அந்தக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்தார். (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இந்தியாவின் அழுத்தத்தை அடுத்தே சம்பந்தனைச் சந்தித்தார் ஜனாதிபதி

யளவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இரண்டு நாள் பயணமாக கடந்த 8ஆம் திகதி கொழும்பு வந்த இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கடந்த 9ஆம் திகதி காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த போது, இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருந்தார்.

இதையடுத்தே, இரா.சம்பந்தனை அலரி மாளிகைக்கு அழைத்து, ஜனாதிபதி பேச்சு நடத்தியிருப்பதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதேவேளை, சிவ்சங்கர் மேனனின் அழுத்தத்தின் பேரில், ஜனாதிபதி சந்திப்புக்கு அழைப்பு விடுத்தாரா என்று இரா. சம்பந்தனிடம் பி.பி.சி. எழுப்பிய கேள்விக்கு, அதுகுறித்து தனக்குத் தெரியாது என்று அவர் பதிலளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் தெரிவுக்குழுவுக்கு வரும்படி தன்னிடம் ஜனாதிபதி கேட்டுக் கொள்ளவில்லை என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சிவ்சங்கர்மேனனிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

### ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு நேற்று இலங்கை வந்தடைந்தது

செய்ய உள்ளது எனவும் தூதரகத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் ஒரு வாரம் தங்கியிருக்கும் ஐரோப்பிய நாடாளுமன்ற பிரதிநிதிகள், அரச தரப்பினரையும் எதிர்க்கட்சியினர் உட்பட ஏனைய அமைப்புகளையும் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் இந்த பயணம் அமைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்கவுள்ளதாக அரசு இதுவரை அறிவிக்கவில்லை.

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில், இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தேசிய ரீதியான சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தது. (த)

### 30 வாடகைக் கார்களை விற்றுப் பிழைத்த ஆசாமி

வர்கள் தவணை முடிந்தும் கார்கள் தம்மிடம் ஒப்படைக்கப்படாததால், சந்தேகம் கொண்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸாருக்கு 30 சொகுசுக்கார்களும் விற்பனை செய்யப்பட்டமை தெரியவந்தது.

இதன்படி வாடகைக்கு கார்களைப் பெற்ற குறித்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது வெவ்வேறு இடங்களிலிருந்து இதுவரை 7 சொகு கார்களைத் தாம் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணை செய்து வருவதாகவும் மிகுதிக் கார்கள் எங்கு, யாருக்கு விற்கப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

### சுயேச்சைக் குழு யாழில் நேற்று கட்டுப் பணம்

கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் திணைக்களத்தினால் ஏற்கனவே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்குத் தேர்தல்கள் திணைக்களத்தில் கட்டுப் பணம் செலுத்தி விண்ணப்பப் படிவங்கள் பெற்று இதனைப் பூரணப்படுத்தி, வேட்பு மனு ஏற்கப்படும் காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கமைவாக நேற்றுத் திங்கட்கிழமை மாணிக்கசோதி அபி மன்ன சிங்கம் என்பவரே சுயேச்சைக்குழுவாகப் போட்டியிவதற்கான கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளார். (த-5)

### விடுவிக்காவிடின் உயிர் துறப்பேன்

சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவர் சிறைச்சாலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் தன்னை விடுதலை செய்யும் வரை உண வருந்தமாட்டேன் என்று கேதீஸ்வரன் விடாப்பிடியாக உள்ளார் என சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் மாதம் தங்காலை சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த வேளை கேதீஸ்வரன் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடிய நிலையில் காப்பாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்துரை திருநாவுக்கரசு
(பூங்கன்று வியாபாரி)

வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்துரை திருநாவுக்கரசு நேற்று (15.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், கனகசபையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22, ஒடைலேன் (ராதா லேன்), வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: மருமகன்.



### ஹென்றிபியசேன ஹெட்டிஆராச்சி

ராகமையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஹென்றிபியசேன ஹெட்டிஆராச்சி நேற்று (15.07.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் உபாலி, சுனில், சுதர்மா, அனுர ஆகியோரின் அன்புத் தந்தையும், சுசியின் மாமனும், பிரதீபன், பிரசாந்தன், ரேவதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.07.2013) புதன்கிழமை கீன்கெந்த மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

627/3, Thuduregedara, Ragama.
0778999442

தகவல்: சுனில் ஆட்சன் மகன் (தபினான்ஸ் கம்பனி)



### முருகேசு ஐயாத்துரை

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஐயாத்துரை (15.07.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு- அன்னமுத்து தம்பதியரின் புதல்வனும், நல்லதம்பி- தெய்வானை தம்பதியரின் மருமகனும் கமலா-தேவியின் அன்புக் கணவரும், அரியநாதன், கமலவாணி, கமலேஸ்-வரி, திருமலர், அழகநாதன், செல்வமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயபாலன், வசந்தி, கவிதா, சேகர், பாலசுப்பிரமணியம், கற்பகவரன் ஆகியோரின் மாமனாரும், விந்துஜா, அனுசா, ஜசிந்தன், டுசாந், டுவாரகா, சாரங்கன், பிரசன்னா, மதுரிகா, டினேஸ், கௌசிகா, மிதுலா, மதுமிகா, சாய்சரன், சாத்வீகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2013) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் பரமேஸ்வரன்
(சட்டத்தரணி J.P.U.M. கொழும்பு)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரன் நேற்று முன்தினம் (14.07.2013) ஞாயிற்றுக் கிழமை கோப்பாயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (சக்கடத்தார்)- கண்மலர் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், கொடி காமத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு (ஆசிரியர்), -தங்கநேசம் தம்பதியரின் அருமை மருமகனும், திலகவதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பகீரதனின் (U.S.A) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தர்மராஜேஸ்வரன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), கனகராஜேஸ்வரன் (மருந்தாளர், இணுவில்), காலஞ்சென்ற திருமதி சிவலோகநாதன் ஜெகதீஸ்வரி (ஆசிரியை), காலஞ் சென்ற ஜெயந்தீஸ்வரன், விமலேஸ்வரி, மகேஸ்வரன் (இராசா, மாரியம்மன் மோட்டோர்ஸ்), குலராஜேஸ்வரி, தயாளந்தேஸ்வரன் (அப்பன்), ஜெயமங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவலோகநாதன் (விரிவுரையாளர்), இராஜராஜேஸ்வரன் (விரிவுரையாளர்), நாகராஜேஸ்வரி, பராசக்தி (ஆசிரியை), மணிமேகலை, குமாரசுவாமி (P.T.I), அருந்த வநாயகி ஆகியோரின் மைத்துனரும், வசீகரன் (U.S.A), மயூரன் (U.K), திருமால்மருகன், திருமுருகன், திருச்செந் தூரன் ஆகியோரின் மாமனும், தார்மிகன், (குவைத்), மிதிலா யோகேந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பெரியதந்தையும், நிலாகினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.07.2013) திங்கட்கிழமை பி.ப 5.00 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராசா (சகோதரன்)
முத்துமாரிஅம்மன் மோட்டோஸ் சக்கடத்தார்
வளவு கோப்பாய். 0212230022

தகவல்: குடும்பத்தினர்.

உதயன்
16/07/2013

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் மட்டுவில் சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 3.45 மணி
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக 'பி' (சிவப்பு) அணி.

பி.ப. 4.45 மணி
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் 'ஏ' (மஞ்சள்) அணி எதிர் திருக்குமரன் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 16
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று கழக மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

'பி' பிரிவு அணி
பி.ப.7 மணி
மட்டுவில் மோர்கனதாஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கைதடி குமரன் விளையாட்டுக் கழகம்

'ஏ' பிரிவு அணி
பி.ப. 7.30 மணி
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அரியாலை சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப. 4.30 மணி
நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம். (ற-23)



# சென்.ஜோண்ஸ் கல்லூரி அபார வெற்றி

கொழும்புத்துறை, ஜூலை 16
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் பிரிவு III கிரிக்கெட் ஆட்டத்தில் சென்.ஜோண்ஸ் 'ஏ' அணி 220 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், சென்.ஜோண்ஸ் கல்லூரி 'ஏ' அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோண்ஸ் கல்லூரி 'ஏ' அணி 8 இலக்குகளை இழந்து 284 ஓட்டங்களைக் குவித்தது.
பிளமிங் ஆட்டமிழக்காது 128 ஓட்டங்களையும், துலக்ஷன் 51 ஓட்டங்களையும் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் ஹாட்லிக் கல்லூரி அணிவீரர்களானதினேஸ் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், சாரங்கன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 59 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 26.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. கனிசன் அதிகபட்சமாக 21 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி சார்பாக நிரோசன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், எமில்டன் 3.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், லியோனி 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
(ற-135)




அரியாலை சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக வீராங்கனைகள் (ற-23)

## ரசிகருக்கு 5 ஆண்டு தடை


இந்தியா- இலங்கை இடையேயான முத்தரப்புத் தொடர் இறுதி கிரிக்கெட் ஆட்டத்தின் போது மைதானத்துக்குள் போத்தலை எறிந்த ரசிகருக்கு டிரினாட் அண்ட் டொபாகோ கிரிக்கெட் சபை 5 ஆண்டு கால தடை விதித்துள்ளது.
முத்தரப்புத் தொடர் இந்தியா- இலங்கை இடையேயான இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்றது. அப்போது விஜய் அவுடிம் என்பவர் வீசிய அந்த போத்தல் இலங்கை வீரர் மலிங்க மீது பட்டது.
இதைத் தொடர்ந்து போத்தலை வீசிய ரசிகரை கடுமையாக எச்சரித்திருக்கும் அந்நாட்டு கிரிக்கெட் சபை, அவர் உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் நுழைய 5 ஆண்டுகாலத்துக்கு தடையும் விதித்திருக்கிறது.

## மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றோர்.

கொழும்புத்துறை, ஜூலை 16
அரியாலை ச.ச.நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட யாழ்.மாவட்ட ரீதியிலான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம்:
முதலாமிடம்: நிரோசன் (கொழும்புத்துறை)
இரண்டாம் இடம்: டினோஷன் (கொழும்புத்துறை)
மூன்றாமிடம்: புவிராஜ் (அரியாலை). (ற-135)

# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 16
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:
அராலி பாரதி விளையாட்டுக் கழகத்துக்கும் அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பெற்றிருந்தன. அதையடுத்து வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக தலா 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அராலி செனிஸ்ரார் விளையாட்டுக்கழகத்துக்கும், ஆனைக்கோட்டை கலையொளி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஆனைக் கோட்டை கலையொளி விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற-23)



பொற்பதி - றோயல் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் போது

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 16
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.
அதில் இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஓர் கோலினைப் பெற்ற நிலையில், வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக தலா 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அரியாலை சனசமூக நிலை யத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றன.
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 16
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், மட்டுவில் சனசமூக நிலையத்தில் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியும், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் வெற்றி பெற்றுள்ளன.
நாவாந்துறை சென்.நீக்கிளஸ் 'ஏ' அணிக்கும் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.
அதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் 'பி' அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ற-23)

## களம் இறங்குகிறார் டில்ஷான்


கொழும்பு பிரேமதாச மைதானத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெற உள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டில்சான் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன் கிண்ண தொடரின் அரை இறுதியில் இந்தியாவுடனான ஆட்டத்தில் டில்சானுக்கு காயம். ஏற்பட்டது. இதனால் அவர் 4 முதல் 6 வார காலத்துக்கு ஓய்வு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து இந்தியா, இலங்கை, மேற்கிந்திய தீவுகள் அணி பங்கேற்ற முத்தரப்புத் தொடரிலும் டில்சான் களமிறங்கவில்லை.

இந்நிலையில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் டில்சான் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நான் தற்போது குணமடைந்துள்ளேன். தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான தொடரின் முதல் போட்டியில் களமிறங்கலாம் என நம்புகின்றேன் என்று டில்சான் தெரிவித்துள்ளார். (ற)





## அன்டர்சனே வெற்றிக்கு காரணம் - குக்

ஆஷஷ் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் வெளிப்படுத்திய திறமை குறித்து அலஸ்ரெயர் குக் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஜேம்ஸ் அண்டர்சன் கைப்பற்றிய 10 இலக்குகளின் உதவியுடன் முதலாவது ஆட்டத்தில் 14 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றிருந்தது.

83ஆவது டெஸ்ட்டில் விளையாடியுள்ள ஜேம்ஸ் அண்டர்சன் ஆட்டமொன்றில் 10 அல்லது 10 இற்கும் அதிகமான இலக்குகளை இரண்டாவது முறையாக கைப்பற்றியுள்ளார்.

பிரட் ஹெடின் மற்றும் ஜேம்ஸ் பட்ரின்சன் ஆகியோர் இறுதி இலக்குக்காக 65 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்து அணிக்கு சவால் விடுத்திருந்தனர்.

எனினும் நடுவரின் தீர்ப்பினை மீளாய்வு செய்யும் முறைமை மூலம் ஜேம்ஸ் அண்டர்சனின் பந்துவீச்சில் இறுதி இலக்காக பிரட் ஹடின் ஆட்டமிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து ஆஸ்திரேலிய அணியின் வெற்றி பெறும் கனவு தகர்ந்தது. (ற)

## அணிக்கு திரும்பும் ஸ்மித்

உபாதைக்கு உள்ளாகியுள்ள தென்னாபிரிக்காவின் டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் கிரஹம் ஸ்மித் அணிக்கு மீண்டும் திரும்பவுள்ளார்.

இதன்பிரகாரம் ஒக்டோபர் மாதம் பாகிஸ்தான் அணிக்கெதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் கிரஹம் ஸ்மித் விளையாடவுள்ளார்.

உபாதை காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக அவர் போட்டிகளில் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.


சரே அணிக்காக் விளையாடிய கிரஹம் ஸ்மித் பின்னர் சத்திரசிகிச்சைகளுக்காக நாடு திரும்பியிருந்தார்.

இந்த நிலையில் நடைபெற்று முடிந்த சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் மற்றும் நடைபெறவுள்ள இலக்கை அணிக்கெதிரான கிரிக்கெட் தொடர் ஆகியவற்றில் இருந்து அவர் நீக்கப்பட்டிருந்தார். (ற)



## ‘அது நான் இல்லை’

### அடம் கில்கிறிஸ்



ஸ்டுவர்ட் புரோட் குறித்து எனது பெயரில் வெளியான டுவிட்டர் செய்திகள் போலியானவை என ஆடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

நோட்டிங்காமில் இங்கிலாந்து- ஆஸ்திரேலிய அணிகள் மோதிய முதல் டெஸ்ட் நடந்தது.

இதன் மூன்றாம் நாள் ஆட்டத்தில், இங்கிலாந்து வீரர் ஸ்டுவர்ட் புரோட் ஆட்டமிழப்பு தொடர்பான சர்ச்சையில் சிக்கினார்.

ஆட்டமிழப்பு எனத் தெரிந்தும் தானாகவே வெளியேறாத புரோட்டின் செயலை பலரும் கண்டித்தனர்.

இந்நிலையில் முன்னாள் ஆஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட் பெயரில், டுவிட்டர் இணையதளத்தில் வெளியான செய்தியில், சிலர் நடுவரின் தீர்ப்பின் படி நடக்க வேண்டும் என்கின்றனர். இது தவறு, நேர்மையாக நடந்து கொள்வது தான் சிறந்தது என தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மறுப்பு தெரிவித்துள்ள கில்கிறிஸ்ட், ''இங்கிலாந்து வீரர் ஸ்டூவர்ட் புரோட் தொடர்பாக, டுவிட்டர் இணையதளத்தில் எனது பெயரில் வெளியான செய்தி குறித்து அறிந்தேன். எனக்கு டுவிட்டரில் இதுவரை கணக்கு கிடையாது, இது போலியான செய்தி.

சில ஊடகங்கள் இதுகுறித்து கேள்வி எழுப்பி இருப்பது வருத்தம் அளிக்கிறது. இது போன்ற போலியான செய்திகள், சட்ட ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகளின் மதிப்பு எனக்கு தெரியும். இச்சம்பவம் குறித்து எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை'' என்று தெரிவித்துள்ளார். (ற)

## டோனி கிடைத்தது வரம்

### இந்திய முன்னாள் வீரர் லட்சுமண்

இந்திய அணிக்கு டோனி தலைவராக கிடைத்தது பெரும் அதிர்ஷ்டம் என இந்திய அணியின் முன்னாள் வீரர் லட்சுமண் தெரிவித்தார்.

இந்திய அணியின் வெற்றிக் தலைவர் டோனி. 2010இல் '20/20', 2011இல் உலகக் கிண்ண, சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் என மூன்று வித தொடரிலும் கிண்ணம் வென்று தந்துள்ளார்.

இது குறித்து லட்சுமண் கூறுகையில்,

“டோனி எப்போதுமே உணர்ச்சி வசப்படமாட்டார். நெருக்கடியான நேரத்தையும், எளிதாக எதிர் கொள்வது இவரின் தனித்திறமை. இவர் தலைவராக கிடைத்தது, இந்திய அணியின் அதிர்ஷ்டம்தான். ஜடேஜா சிறப்பான பந்துவீச்சாளராக உள்ளார். அத்துடன் துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்பிலும் அசத்துகிறார். அணியின் மிகப் பெரிய சொத்தாக இவர் உள்ளார். இவரின் திறமையை வெளிப்படுத்தியது டோனி தான்.


பிரிமியர் தொடரில், ஐதராபாத் அணியில் தவானுடன் இணைந்து செயல்பட்டுள்ளேன். இவர் விளையாட்டும் நன்றாக உள்ளது.

இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணிலேயே இந்திய அணி வீழ்த்தியது பாராட்டுக்குரியது. இந்த வெற்றிக்கு இளம் வீரர்களே காரணம். எதிர்வரும் 2015ஆம் ஆண்டு நடக்க உள்ள உலக கிண்ணத் தொடரில் சாதிக்கும் விதமாக, சரியான பாதையில் அணி பயணிக்கிறது.

2010 மற்றும் 2011 ஆண்டு பருவ காலங்களில் இந்திய அணி, தென்னாபிரிக்கா சென்றபோது, சச்சின் இரண்டு சதம் அடித்தார். இதே போல, இந்த ஆண்டும் இத்தொடரில் சச்சின் சிறப்பாக செயல்படுவார் என நம்புகிறேன்'' என்று தெரிவித்தார்.(ற)




# பாகிஸ்தான் வெற்றி




மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

சயிட் அப்ரிடியின் அதிரடியின் காரணமாக இந்த வெற்றி பெறப்பட்டுள்ளது. கயானாவில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத்தில் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்த பாகிஸ்தான் அணி 4 இலக்குகளை இழந்து 23 ஓட்டங்களையும் 5 இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.



எனினும் மிஸ்பா உல் ஹக் மற்றும் சயிட் அப்ரிடி ஆகிய இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை புரிந்து பாகிஸ்தான் அணிக்கு போராடக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினர். அதிரடியாக ஆடிய சயிட் அப்ரிடி, 55 பந்துகளில் 76 ஓட்டங்களையும் மிஸ்பா உல் ஹக் 121 பந்துகளில் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஜேஸன் ஹோல்டர் 10 பந்துப்பரிமாற்றங்களில் 13 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றினார். தவிர, கேமர் றோச், டுவைன் பிராவோ இருவரும் தலா 2 இலக்குகளையும் கெரான் பொலார்ட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

225 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 41 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 126 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை இழந்த அவ்வணி, 3 இலக்குகளை இழந்து 7 ஓட்டங்களுடன் தடுமாறியது.

அதன் பின்னர் 34 ஓட்ட இணைப்பாட்டம் பகிரப்பட்ட போதிலும் அடுத்த 7 இலக்குகளும் சயிட் அப்ரிடிக்கு வீழ்ந்தன.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 75 பந்துகளில் 25 ஓட்டங்களையும் டெரன் சமி 43 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயிட் அப்ரிடி 9 பந்துப்பரிமாற்றங்களில் 12 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளையும் மொஹமட் இர்பான் 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சயிட் அப்ரிடி தெரிவானார்.

# மலிங்க மீது போத்தலை வீசியவருக்கு 5 ஆண்டு தடை




இந்தியா- இலங்கை இடையேயான இறுதி கிரிக்கெட் போட்டியின் போது மைதானத்துக்குள் போத்தலை வீசி எறிந்த இரசிகருக்கு டிரினாட் அன்ட் டுபாக்கோ கிரிக்கெட் சபை 5 ஆண்டுகாலத் தடை விதித்துள்ளது.

இந்தியா- இலங்கை இடையேயான இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்றது.

அப்போது விஜய் அவுடிம் என்பவர் போத்தலை மைதானத்துக்குள் வீசிவிட்டு தப்பி ஓட முயன்றார். அந்தப் போத்தல் இலங்கை வீரர் மலிங்க மீது பட்டது.

இதைத் தொடர்ந்து போத்தலை வீசிய இரசிகரை கடுமையாக எச்சரித்த அந்நாட்டு கிரிக்கெட் சபை, அவருக்கு உள்ளூர் மற்றும் சர்வதேசப் போட்டிகள் நடைபெறும் மைதானங்களில் கிரிக்கெட் விளையாட்டுக்களைப் பார்வையிட 5 ஆண்டு காலத்துக்குத் தடையும் விதித்தது.

கரீபியன் தீவுகளில் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஒழுக்காற்று நடவடிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

CHEMISTRY
A/L 2015
General Chemistry
N.Vakeesan B.Sc
ஆரம்பம்- 17.07.2013 3.30p.m
NEC Colock Tower Rd, Jaffna.

எமது சட்ட ஆலோசனையில் கனடா விசா ஆலோசனை பெற்று வெற்றி பெற்றவர்களும் - தோல்வி கண்டவர்களும் நேரில் கலந்தாய்வு

அதிரடியான முன்மாதிரியான கைங்கரியம்
இடம் : திசைகாட்டி கேட்போர் கூடம்
காலம் : சனிக்கிழமை 20.07.2013
நேரம் : முற்பதிவின் போது தெரிவிக்கப்படும்.
தொலைபேசி இல. : 021 221 9016, 021 568 9090
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

3 மாதத்தில் சரளமாக ஆங்கிலம் பேச விரும்புகிறீர்களா?
ஆங்கிலம் என்பது நீந்துதலைப் போலவும்,வாகனம் ஓட்டுதலைப் போலவும் பழகுதலின் மூலம் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு செயற்பாடாகும்.
ஆங்கிலம் பேசிப் பழகுதலை விடுத்து அதன் இலக்கணத்தை இன்னும் கற்றுக்கொள்வது ஒரு முட்டாள்த்தனமான செயலாகும்.
ஆங்கிலம் கற்பதை விடுத்து நாளாந்த பேச்சுப் பயிற்சியில் எம்முடன் ஈடுபடுவதன் மூலம் நீங்களும் 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம் பேச முடியும்.
எமது இப் பயிற்சிநெறியில் இணைய விரும்பும் அனைவரும் 20.07.2013 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைய முடியும்.
சனி,ஞாயிறு பிரிவுகள்
பிரிவு 1. 8– 10.00 பிரிவு 2. 10– 12.00
பிரிவு 3. 1– 03.00 பிரிவு 4. 3– 5.00
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
முன்பதிவு அவசியம்
Note: 3 மாதத்தில் சரளமாக ஆங்கிலம் பேச முடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்கப்படும்
SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம்,யாழ்
077 621 4567

SAFE Pc
100% CLEAN
NO VIRUSES NO SPYWARE
துரித கணினி பழுதுபார்க்கும் சேவை
உங்கள் இன்ரநெற்றில் பிரச்சினையா?
உங்களால் உங்களுடைய கணினியை சரியாக இயக்க முடியவில்லையா?
வைரஸ் தொல்லையால் அவஸ்தைப்படுகிறீர்களா?
உங்களுடைய கணினி, மடிக்கணினி, இன்ரநெற், எந்தவித பிரச்சினையானாலும்
நாங்கள் வருகிறோம். நீங்கள் அழைக்க வேண்டியது..........
021 5 67 57 47
SAFE Pc
கணினி கண்காணிப்பாளர்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.